# பொதுப்பணித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2023–2024

### மானியக் கோரிக்கை எண். 39

## எ.வ. வேலு
### பொதுப்பணித் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2023

## பொருளடக்கம்



| வ. எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| | முன்னுரை | 1 |
| 1.0 | நோக்கங்கள் | 4 |
| 2.0 | பணிகள் | 5 |
| 3.0 | தொலை நோக்குப் பார்வை | 6 |
| 4.0 | நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் | 7 |
| 5.0 | பொதுப்பணித் துறையின் பிரிவுகள் | 9 |
| 6.0 | சேவைகள் | 21 |
| 7.0 | பாரம்பரிய கட்டடங்கள் பாதுகாத்தல், புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைத்தல் பணிகள் | 35 |
| 8.0 | நொறுக்கப்பட்ட கல் மணல் (எம்–சாண்ட்) | 37 |
| 9.0 | மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் / சிறப்பு திட்டங்கள் (Iconic Projects) | 40 |
| 10.0 | நினைவகங்கள் மற்றும் மணிமண்டபங்கள் | 47 |
| 11.0 | அரசு கட்டடங்கள் பராமரிப்பு | 48 |
| 12.0 | துறை வாரியான கட்டடப் பணிகள் | 50 |
| 13.0 | நிதி ஒதுக்கீடு 2023–2024 | 86 |
| | முடிவுரை | 88 |

**முன்னுரை**

**"மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம் யாவுள முன்நிற் பவை".**

**(அதிகாரம் 64, குறள் 636)**

"நூலறிவுடன் இயற்கையான மதிநுட்பமும் உள்ளவர்களுக்கு முன்னால் எந்த சூழ்ச்சியும் எதிர்த்து நிற்க முடியாது".

மாநிலத்தின் பல்வேறு அரசுத் துறைகளின் கட்டட உள்கட்டமைப்பை மேம்படுத்துவதில் பொதுப்பணித் துறை மிக முக்கியப் பங்காற்றுகிறது. கட்டடங்கள் கட்டுதல், சிறப்புக் கட்டமைப்புகள், அவற்றின் பராமரிப்பு மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவத்தை அளிப்பதில் முதன்மையான சேவையை இத்துறை அனைத்து அரசுத் துறைகளுக்கும் வழங்குகிறது.

1858 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட பொதுப்பணித் துறையானது அனைத்து பொறியியல் துறைகளுக்கும் தாய் துறையாக விளங்குகிறது. பொறியியல் கட்டுமான நிபுணத்துவத்துடன் மாநில உள்கட்டமைப்பை மேம்படுத்துவதன் மூலம் இத்துறை

165 ஆண்டுகளாக மக்களுக்குச் சேவைகளைத் தொடர்ந்து வழங்கி வருகிறது.

பொதுப்பணித் துறை பல்வேறு அரசுத் துறைகளின் தேவைக்கேற்ப பொதுக் கட்டடங்களின் வடிவமைப்பைத் திட்டமிட்டு, அவற்றின் நிலைத் தன்மையை உறுதி செய்து, அரசின் நிதியினைக் கட்டுப்பாட்டுடன் செலவிட்டு, கட்டுமானப் பணிகளை விரைந்து முடித்துப் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அளிக்கின்றது.

பாரம்பரிய வரலாற்று மற்றும் பண்பாட்டுச் சிறப்புகளை பாதுகாக்கும் பொருட்டு, நினைவகங்கள், நினைவுச் சின்னங்கள் மற்றும் பாரம்பரியக் கட்டடங்கள் ஆகியவற்றைப் புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் பொதுப்பணித் துறையின் முக்கிய பணிகளில் ஒன்றாகும்.

சிறந்த மூலதனச் சொத்துக்களை உருவாக்கவும், மாநிலத்தின் நிலையான வளர்ச்சிக்கு வழி வகுக்கும் கட்டுமானப் பொருட்கள், தொழில்நுட்பம் மற்றும் கட்டுமான நடவடிக்கைகளில் புதிய முறைகளை கையாள்வதற்கும் தொடர்ந்து முயற்சி செய்து வரும்

பொதுப்பணித் துறையானது, மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியின் ஒரு அங்கமாக விளங்குகிறது.

மருத்துவத் துறையின் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள பொதுப்பணித் துறையில் தனியாக வட்டங்கள் மற்றும் கோட்டங்கள் இயங்கி வந்த நிலையில், புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட, செங்கல்பட்டு, இராணிப்பேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, திருப்பூர், தென்காசி, சிவகங்கை மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களுக்கு செயற்பொறியாளர் பணியிடங்கள் இல்லாமல், பணிகளை மேற்பார்வையிடுவதில் தொய்வு ஏற்பட்டு வந்தது. இதனைச் சீர் செய்யும் விதமாக மருத்துவப் பணி வட்டங்கள் மற்றும் இதர வட்டங்களையும் ஒன்றிணைத்து, மாவட்டத்திற்கு ஒரு செயற்பொறியாளர் / கோட்டம் இருக்கும் வகையில், பணியிடங்களை மறுசீரமைத்து தற்போது பணிகள் செயலாக்க மேற்பார்வை சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பாரம்பரிய கட்டடப் பிரிவு, கட்டடக் கலைப் பிரிவு மற்றும் தரக்கட்டுப்பாடுக் கோட்டம் ஆகியவற்றை பலப்படுத்துவதற்கான கருத்துருக்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

தலைமைச் செயலகத்தில் பொதுப்பணித் துறையில் தலைமைப் பொறியாளர் நிலையில் ஒரு புதிய அரசு சிறப்புச் செயலாளர் பணியிடம் மற்றும் பொதுப்பணித் துறை சென்னை மண்டலத்திற்கென ஒரு புதிய தலைமைப் பொறியாளர் பணியிடம் உருவாக்கப்பட்டுள்ளன. பொதுப்பணித் துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் ஒரு புதிய துணைத் தலைமைப் பொறியாளர் (மின்னியல்) பணியிடம் உருவாக்கப்பட்டுள்ளது.

## 1.0 நோக்கங்கள் (Objectives)

கட்டடக்கலை, திட்டம் மற்றும் வடிவமைப்பு, கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, மின், தரக்கட்டுப்பாடு, பொதுப்பணிப் பணியாளர் பயிற்சி நிலையம் மற்றும் கொதிகலன்கள் இயக்குநரகம் போன்ற பிரிவுகளின் ஒருங்கிணைந்த முயற்சியினால் புதிய கட்டுமான முறைகளை மேற்கொள்வதன் மூலம் அரசுத் துறைகளுக்கான நீடித்த மூலதனச் சொத்துக்களை உருவாக்குவதுடன், பாதுகாப்பு மற்றும் பொருளாதார வளங்களின் உகந்த பயன்பாட்டினைப் பொதுப்பணித் துறை உறுதி செய்கிறது.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மாண்புமிகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் அவர்கள் சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையினை 28.05.2022 அன்று திறந்து வைத்தார்.

**"தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்**
**சொல்லலும் வல்லது அமைச்சு".**

**(அதிகாரம் 64, குறள் 634)**

"ஒரு செயலைத் தேர்ந்தெடுத்தலும், அதனை நிறைவேற்றிட வழிவகைகளை ஆராய்ந்து ஈடுபடுதலும், முடிவு எதுவாயினும் அதனை உறுதிபடச் சொல்லும் ஆற்றல் படைத்திருத்தலும் அமைச்சருக்குரிய சிறப்பாகும்"

அதற்கிணங்க, குறிப்பிட்ட காலத்திற்குள் உறுதியளித்தவாறு, அரசால் மேற்கொள்ளப்படும் பணிகளை உரிய தரத்துடன் விரைந்து செயல்படுத்துவதன் மூலம், அரசுக்குப் பெருமை சேர்ப்பதே இத்துறையின் நோக்கமாகும்.

**2.0 பணிகள் (Mission)**

கட்டடங்களின் வடிவில் மூலதனச் சொத்துகளை உருவாக்குவதும் அதன் பராமரிப்பும் துறையின் முதன்மையான பணி.

சிறந்த நிர்வாகம் மற்றும் வெளிப்படைத் தன்மைக்காக மாநிலம் முழுமைக்கும்

கணினிமயமாக்கல் போன்ற மின் ஆளுமை முயற்சிகளை நோக்கிச் செயல்படுதல்.

கட்டுமான மற்றும் அதன் உபகரணங்கள் தொடர்பான தொழில்நுட்ப முறைகளில் ஆராய்ச்சி செய்வதன் மூலம் வளங்களின் உகந்த பயன்பாடு, பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் சீர்கேட்டினை கட்டுப்படுத்த வழிவகை செய்தல்.

பாரம்பரிய கட்டடங்கள் மற்றும் நினைவுச் சின்னங்களை மறுசீரமைப்பு, புதுப்பித்தல் மற்றும் பாதுகாப்பதன் மூலம் வரலாற்று மற்றும் பண்பாட்டின் முக்கியத்துவத்தை பாதுகாத்தல்.

அரசின் முக்கிய நிகழ்ச்சிகள் மற்றும் மிக முக்கிய பிரமுகர்கள் வருகை தொடர்பான நிகழ்வுகளின்போது கட்டுமான மற்றும் மின் பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ளுதல்.

## 3.0 தொலைநோக்குப் பார்வை (Vision)

மக்களின் தேவைகளை நிறைவு செய்ய மாநிலத்தின் கட்டட உள்கட்டமைப்பை மேம்படுத்துவதன் மூலம், தமிழ்நாட்டினை தன்னிறைவு பெறச் செய்தல்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை, ராஜா அண்ணாமலைபுரத்தில் அமைந்துள்ள புதுப்பிக்கப்பட்ட அண்ணல் அம்பேத்கர் மணிமண்டபத்தில் நிறுவப்பட்டுள்ள பாரத ரத்னா, பாபா சாகேப் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் முழு திருவுருவச் சிலையினை 27.10.2022 அன்று திறந்து வைத்தார்.

தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் உதவியுடன் தொடக்கம் முதல் முடிவடையும் வரை ஒப்படைக்கப்பட்ட பணிக்கான செயல்பாடுகள் கணினிமயமாக்கப்பட்டு வருகின்றன. மேலும், கட்டுமானப் பணித்தளத்தில் இருந்து பணியின் முன்னேற்றம் பதிவு செய்யப்பட்டு புதுப்பிக்கப்பட்டு, நிர்வாகத் திறனை மேம்படுத்த தகுதியான அலுவலரால் சரிபார்க்கப்படும்.

இத்துறையின் செயல்பாடுகளை முழுமையான கணினி மயமாக்கலின் மூலம் வெளிப்படைத் தன்மை மற்றும் சிறந்த நிர்வாகத்தை உறுதி செய்தல் மற்றும் மக்களுக்கு அரசின் நடவடிக்கைகள் குறித்த தகவல் வழங்குதல்.

## 4.0 நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் (Sustainable Development Goals)

ஐக்கிய நாடுகள் பொது சபை உச்சி மாநாட்டில் 193 உறுப்பு நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் – 2030 செயல் திட்டத்தின் பகுதியாக, 17 நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் மற்றும் 169 குறிக்கோள்கள் உள்ளன.

இத்துறை அரசுக் கட்டடங்கள் கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்கிறது.

**பொதுப்பணித் துறைக்கான இரண்டு இலக்குகள் 9.1 மற்றும் 11.4**

**இலக்கு 9.1:** அனைவருக்கும் சமநிலையோடு வாய்ப்பளிப்பதை நோக்கமாக கொண்டு, பொருளாதார மேம்பாடு மற்றும் மனித நல்வாழ்விற்கு ஆதரவாக மண்டல மற்றும் எல்லை கடந்த உள்கட்டமைப்பு உட்பட, தரம், நம்பகமான மற்றும் நிலையான உள்கட்டமைப்பை உருவாக்குதல்.

(i) பேரிடர் அபாயக் குறைப்புக்கான சென்டாய் கட்டமைப்பின் 2015–2030–க்கு இணங்க பொதுப்பணித் துறையால் கட்டப்படும் கட்டடங்கள், வளத்திறன், தணிப்பு நடவடிக்கைகள் மற்றும் காலநிலை மாற்றம், பேரழிவுகளைத் தாங்கும் தன்மை ஆகியவற்றை உறுதி செய்கிறது.

(ii) அரசுக் கட்டடங்களின் உள்கட்டமைப்புத் திட்டங்களில் ஆற்று மணலுக்குப் பதிலாக நொறுக்கப்பட்ட கல் மணலைப் பயன்படுத்துதல், நிலக்கரி சாம்பல் வகை செங்கற்களைப் பயன்படுத்துதல் மற்றும் தரத்தை வலுப்படுத்துதல் போன்ற புதிய வழிமுறைகளை தமிழக அரசு கட்டட



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்பமை உச்சநீதிமன்ற நீதியரசர்கள் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதியரசர் ஆகியோர் முன்னிலையில், சென்னையில் ரூ.315 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள பன்னடுக்கு ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடத்திற்கு 04.09.2022 அன்று அடிக்கல் நாட்டினார்.

ஆராய்ச்சி நிலையம், பொதுப்பணித் துறை ஊக்குவிக்கிறது.

**இலக்கு 11.4 :** உலகின் கலாச்சார மற்றும் இயற்கை பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் முயற்சிகளை வலுப்படுத்துதல்.

பாரம்பரியக் கட்டமைப்புகளைப் பாதுகாக்க 2017 ஆம் ஆண்டு பொதுப்பணித் துறையில் தனிப்பிரிவாக கட்டட மையம் மற்றும் பாதுகாத்தல் கோட்டம், சென்னை உருவாக்கப்பட்டது.

நிலையான வளர்ச்சி இலக்குகளை நிறைவேற்ற பொதுப்பணித் துறை தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

## 5.0 பொதுப்பணித் துறையின் பிரிவுகள்

### 5.1 கட்டடக் கலைப் பிரிவு (Architect Wing)

1984 ஆம் ஆண்டிலிருந்து பொதுப்பணித் துறை கட்டடக் கலை பிரிவு (தலைமைக் கட்டடக் கலைஞரின் அலுவலகமாக நிலை உயர்த்தப்பட்டு) தலைமைக் கட்டடக் கலைஞரின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகிறது.


அலுவலகம், கல்வி, மருத்துவம் மற்றும் குடியிருப்பு போன்ற பயன்பாட்டு அம்சங்களைக்


கருத்தில் கொண்டு, நிலையான விதிமுறைகளின்படி, கட்டடங்களை நிர்மாணிப்பதற்கான முதனிலை வரைபடங்கள் (Preliminary drawings), விரிவான திட்டங்கள் (Detailed Plans), முகப்பு மற்றும் குறுக்குவெட்டுகளின் வரைபடங்கள் போன்றவற்றை (Elevation and Cross sections drawings) கட்டடக் கலை பிரிவு உருவாக்குகிறது. இரு பரிமாணங்கள் மற்றும் முப்பரிமாண (2D மற்றும் 3D) தள வரைபடம், மனை வரைபடம், முகப்பு மற்றும் சமநீளக் காட்சிகளை (Elevation and Isometric views) வழங்குவதும் இதில் அடங்கும்.

இந்த புதிய வடிவிலான வரைபடங்கள் மற்றும் டிஜிட்டல் முப்பரிமாண மாதிரி (Digital 3D Modelling), கட்டுமானத்தின் இறுதி தோற்றம் மற்றும் பயன்பாடு பற்றிய தெளிவான விளக்கத்தினை பயன்பாட்டுத் துறைக்கு வழங்குகிறது.

டிஜிட்டல் ஊடகங்களின் இந்த நவீன புதுமையான சேவையை வழங்குவதற்காக, கட்டட வரைகலைப் பிரிவு ஆட்டோகேட் (Auto CAD), ரெவிட் (Revit), 3டிஎஸ் மேக்ஸ் (3dsMax) மற்றும் ஸ்கெட்ச்அப் (Sketchup) போன்ற அதிவேக மென்பொருள் நிரல்களைப் பயன்படுத்துகிறது.

# பொதுப்பணித் துறை – அமைப்பு விளக்கப்படம்




முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும்
தலைமைப் பொறியாளர் (பொது)
பொதுப்பணித்துறை
சென்னை மண்டலம்
1. சென்னை
2. வேலூர்
3. திருவண்ணாமலை
4. ராணிப்பேட்டை
5. திருப்பத்தூர்
6. விழுப்புரம்
7. காஞ்சிபுரம்
8. திருவள்ளூர்
9. கள்ளக்குறிச்சி
10. செங்கல்பட்டு
திருச்சி மண்டலம்
1. திருச்சிராப்பள்ளி
2. புதுக்கோட்டை
3. அரியலூர்
4. பெரம்பலூர்
5. திருவாரூர்
6. தஞ்சாவூர்
7. நாகப்பட்டினம்
8. கடலூர்
9. மயிலாடுதுறை
கோயம்புத்தூர் மண்டலம்
1. கோயம்புத்தூர்
2. நீலகிரி
3. ஈரோடு
4. நாமக்கல்
5. சேலம்
6. திருப்பூர்
7. கரூர்
8. கிருஷ்ணகிரி
9. தருமபுரி
மதுரை மண்டலம்
1. மதுரை
2. திருநெல்வேலி
3. விருதுநகர்
4. தூத்துக்குடி
5. இராமநாதபுரம்
6. கன்னியாகுமரி
7. திண்டுக்கல்
8. தேனி
9. சிவகங்கை
10. தென்காசி

தொழில்நுட்ப மாற்றங்களுக்கேற்ப, கட்டட வரைகலை பிரிவு, டிஜிட்டல் 3D வடிவமைப்பு தொடர்பான அனைத்து அண்மைக்கால மென்பொருள்களையும் தொடர்ந்து பயன்படுத்தி அனைத்து அரசு துறைகளுக்கும் சிறந்த சேவைகளை வழங்குவதில் கட்டடக் கலைப் பிரிவு முன்னணியில் உள்ளது.

## 5.2 திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம் (Planning and Designs Circle)

நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அனைத்து வகையான சுமைகளையும் தாங்கும் வகையில் இந்திய தரநிர்ணய அமைவன (Bureau of Indian Standards) விதிமுறைகளுக்கு இணங்க, அரசு கட்டடங்களின் தேவைகளுக்கு ஏற்ப கட்டமைப்பு வடிவம் மற்றும் வரைபடங்களை உருவாக்குவதில் திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம் முதன்மைப் பங்கு வகிக்கிறது.

மேலும், மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை கட்டடங்கள், ஆட்சியர் அலுவலகக் கட்டடங்கள், நினைவுச் சின்னங்கள், நீதிமன்றக் கட்டடங்கள், அரசு விருந்தினர் இல்லங்கள்,

நினைவகங்கள், அடுக்குமாடி குடியிருப்புக் கட்டடங்கள் போன்ற அனைத்து அரசு கட்டடங்களின் வடிவமைப்புப் பணிகளை மேற்கொள்கிறது.

தொழில்நுட்பம் சார்ந்த சுற்றறிக்கைகள் வெளியிடுவதன் மூலம் திறமையான மற்றும் தரமான கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள, பொதுப்பணித் துறை பொறியாளர்களுக்கு வழிகாட்டுகிறது.

புதிய மற்றும் 50 ஆண்டுகளுக்கு மேல் பழமையான திரையரங்குகளின் கட்டமைப்புகளுக்கு உறுதித் தன்மை சான்றிதழ் வழங்குதல் மற்றும் பள்ளிகள், கலாச்சார மையங்கள், திரையரங்குகள், கல்லூரிகள் போன்ற பொதுக் கட்டடங்களுக்குக் கட்டமைப்பு நிலைத்தன்மை சான்றிதழ் வழங்குதல் ஆகிய பணிகளை மேற்கொள்கிறது.

## 5.3 தமிழக அரசு கட்டட ஆராய்ச்சி நிலையம் (Tamizhaga Arasu Buildings Research Station)

தமிழக அரசு கட்டட ஆராய்ச்சி நிலையம், பல்வேறு கட்டுமான பொருள்களான (சிவில் மற்றும் எலக்ட்ரிக்கல்) கம்பி, சிமென்ட், பெயிண்ட், பிவிசி பைப்புகள், டைல்ஸ், கதவு, ஜன்னல், மின் கம்பிகள், சுவிட்சுகள், விளக்குகள், கன்ட்யூட் பைப்புகள் (conduit




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 08.08.2022 அன்று பொதுப்பணித் துறையில் 144 இளநிலை வரைதொழில் அலுவலர் (சிவில்) பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

Pipes) மற்றும் சந்தையில் அவ்வப்போது அறிமுகப்படுத்தப்படும் நவீன தொழில்நுட்பங்களை கொண்ட கட்டுமான பொருட்களின் தரத்தினை இந்திய தொழில் நுட்ப கழகம் (IIT), இந்திய தர நிர்ணய அமைவனம் (BIS), அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் பல துறையை சார்ந்த வல்லுநர்களைக் கொண்ட பொதுப்பணித் துறையின் மதிப்பீட்டுக் குழுவின் மூலம் மதிப்பீடு செய்து ஒப்புதல் வழங்கி, தமிழ்நாட்டில் நடைபெறும் தனியார் மற்றும் அரசு கட்டுமானப் பணிகளில் பயன்படுத்துவதற்கு வழிவகை செய்கிறது.

பல்வேறு அமைப்புகள் / நிறுவனங்களின் வல்லுநர்கள் மற்றும் துறைப் பொறியாளர்களை ஈடுபடுத்தி கட்டுமானத் துறையில் இன்றைய தேவைகளைப் பூர்த்தி செய்ய தொழில்நுட்பத் திறன்களை மேம்படுத்துவதற்கும் உதவிப் பொறியாளர்கள், இளநிலைப் பொறியாளர்கள் மற்றும் உதவி செயற்பொறியாளர்களுக்கு ஆண்டுதோறும் தொழில்நுட்பப் பயிற்சித் திட்டங்களை நடத்துகிறது.

பல்வேறு தனியார் நிறுவனங்கள், அரசுத் துறைகள் போன்றவற்றிற்கு தொழில்நுட்ப ஆலோசனை சேவைகளை வழங்குகிறது.

சென்னை, தரமணியில் நிறுவப்பட்டுள்ள ஆய்வகத்தில் சிமென்ட், இரும்பு, கான்கிரீட் போன்ற கட்டுமானப் பொருள்களின் தரத்திற்கான ஆய்வகச் சோதனை நடத்தப்படுகிறது.

## 5.4 கட்டட மையம் மற்றும் பாதுகாத்தல் கோட்டம் (Building Centre and Conservation Division)

பொதுப்பணித் துறையின் சிறப்புப் பிரிவான கட்டட மையம் மற்றும் பாதுகாத்தல் கோட்டம், தமிழ்நாட்டில் அமைந்துள்ள பாரம்பரியக் கட்டடங்களை மறுசீரமைக்கவும், மீட்டுருவாக்கவும் மற்றும் பாதுகாக்கவும் செயல்பட்டு வருகிறது. சென்னை சேப்பாக்கத்தில் உள்ள கலச மஹால், எழும்பூர் நீதிமன்றக் கட்டடம், எழும்பூர் அருங்காட்சியகம், சென்னை உயர்நீதிமன்றம், சேப்பாக்கத்தில் உள்ள பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளர் அலுவலகம் போன்ற பல மதிப்புமிக்க பாரம்பரியக் கட்டடங்களைப் பொதுப்பணித் துறை ஏற்கெனவே மீட்டுருவாக்கியுள்ளது. சென்னை, சேப்பாக்கத்தில் உள்ள கட்டடக்கலை மதிப்பிற்குப் பெயர் பெற்ற ஹுமாயூன் மஹால் தற்போது இத்துறையால் சீரமைக்கப்பட்டு வருகிறது. சென்னை, ராஜாஜி சாலையில் உள்ள பதிவுத் துறை துணைத் தலைவர்

அலுவலகம், கோயம்புத்தூரில் உள்ள குதிரைவண்டி நீதிமன்றக் கட்டடம், சேலத்தில் உள்ள பழைய தொழிலாளர் நீதிமன்றக் கட்டடம், திருச்சியில் உள்ள பழைய ஆட்சியர் கட்டடம் (இராணி மங்கம்மாள் அரண்மனை), கோயம்புத்தூரில் உள்ள ஆளுநர் மாளிகை (பழைய வனத்துறை அலுவலகம்), கொடைக்கானல் கோஹினூர் ஷேக் அப்துல்லா மாளிகை மற்றும் சென்னை பல்கலைக்கழகக் கட்டடம் போன்ற பழமையான பாரம்பரிய கட்டடங்களை மீட்டுருவாக்கும் பணிகள் இக்கோட்டத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 5.5 கட்டுமான மற்றும் பராமரிப்புப் பிரிவு (Construction and Maintenance Wing)

கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பிரிவானது மாநிலம் முழுவதும் 43 கோட்டங்களுடன் செயற்பட்டுவரும் இத்துறையின் முக்கிய செயற்பாட்டுப் பிரிவாகும். தலைமைக் கட்டடக் கலைஞரால் தயாரிக்கப்படும் வரைபடம் மற்றும் திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டத்தால் தயாரிக்கப்படும் கட்டமைப்பு வரைபடத்தின்படி திட்டத்தைச் செயல்படுத்துவது கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பிரிவின் முதன்மைப் பணியாகும். ஒப்பந்தகாரர்களால்

மேற்கொள்ளப்படும் கட்டுமானப் பணிகளை மேற்பார்வையிடுதல் மற்றும் ஆய்வு செய்தல், ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டத்தில் இருந்து மாறுபடுதலை தடுக்கும் நோக்கத்தில் குறிப்பிட்ட கால இடைவெளியில் அளவிடுதல் மற்றும் அளவு குறிப்பேட்டில் முறையாக பதிவு செய்தல் மற்றும் செலவினங்களைப் பதிவு செய்வதற்கான பதிவேட்டைப் பராமரிப்பது போன்ற பணிகளை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது.

## 5.6 மின் பிரிவு (Electrical Wing)

பொதுப்பணித் துறையால் கட்டப்படும் கட்டடங்கள்/ கட்டமைப்புகளை நவீன தொழில்நுட்ப உதவியுடன் செயல்பாட்டிற்கு கொண்டு வருதல் மற்றும் பொலிவுடன் திகழச்செய்வது மின்பிரிவின் பணியாகும். மாநிலம் முழுவதும் 8 மின் கோட்டங்கள் செயல்பட்டு வருகின்றன.

54 ஆண்டுகளுக்கும் மேலாக மின்பிரிவின் மூலமாக கட்டடங்களின் உட்புற மற்றும் வெளிப்புற மின் பணிகள் உட்பட, சிறப்பு மின் பணிகளான குளிர்சாதன வசதிகள் (HVAC), மின்தூக்கி, மின்னாக்கி, மின்மாற்றி, ஒலி–ஒளி அமைப்பு, காணொலிக் காட்சிகள், தொலைபேசி வசதிகள், கண்காணிக்கும்

நிழற்படக் கருவிகள் மற்றும் தீயணைப்பு எச்சரிக்கை கருவிகள் நிறுவுதல் மற்றும் நினைவகங்கள் மற்றும் நினைவுச் சின்னங்களில் சிறப்பு ஒலி, ஒளி அமைப்பு ஆகிய பணிகள் செவ்வனே நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

அனைத்து அரசுக் கட்டடங்களில் மின் பணிகள் மற்றும் மின் பராமரிப்புப் பணிகளும் தொய்வின்றி மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழ்நாடு மின்சார சட்டம் மற்றும் மத்திய மின்சார ஆணைய ஒழுங்குமுறைகளை பின்பற்றி அனைத்து மின் பணிகளும் பாதுகாப்பான முறையில் மேற்கொள்ளப்படுகின்றன.

மாற்றுத் திறனாளிகள் உரிமைகள் சட்டம், 2016இன் படி தடையற்ற சூழலை உருவாக்குவதற்கு தனிக் கவனத்துடன் மின் அமைப்புப் பணிகள் சீரிய முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 5.7 தரக்கட்டுப்பாடு கோட்டம் (Quality Control Division)

கட்டடங்களின் தரம் சீராக இருப்பதை உறுதி செய்வதற்கு, ஒருங்கிணைந்த தரக் கட்டுப்பாடு முறையினை ஏற்படுத்துதல் தரக் கட்டுப்பாடு கோட்டத்தின் பணியாகும்.

ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுமான பணிகளின் தரத்தினை உறுதி செய்வதற்கு பணி தளத்தில் முறையாக ஆய்வு செய்தல் தரக் கட்டுப்பாடு கோட்டங்களின் பொறுப்பாகும்.

சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் 3 தரக்கட்டுப்பாடு கோட்டங்கள், செயற்பொறியாளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

## 5.8 பொதுப்பணி பணியாளர் பயிற்சி நிலையம் (Public Works Staff Training Institute)

திருச்சிராப்பள்ளியில் செயல்படும் பொதுப்பணி பணியாளர் பயிற்சி நிலையம், பொதுப்பணித் துறையின் பொறியாளர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களுக்கு புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் அரசின் கொள்கைகளுக்கு ஏற்றவாறு அவ்வப்போது பயிற்சி அளித்து வருகிறது.

2022–2023–ஆம் ஆண்டில் பொதுப்பணி பணியாளர்கள் பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட பயிற்சிகளால் 160 அமைச்சுப் பணியாளர்களும் மற்றும் 234 தொழில்நுட்ப பணியாளர்களும் பயனடைந்துள்ளனர்.

சென்னையில் 17.03.2023 அன்று நடைபெற்ற பொதுப்பணித் துறையின் பொறியாளர்கள் மற்றும் கட்டடக் கலைஞர்களுக்கான **"நவீன கட்டுமான தொழில்நுட்பங்கள் மற்றும் செய்நுட்ப அறிவு"** பற்றிய ஒரு நாள் பயிற்சி மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

## 5.9 கொதிகலன்கள் இயக்குநரகம் (Directorate of Boilers)

கொதிகலன்கள் சட்டம், 1923 மற்றும் கொதிகலன்கள் ஒழுங்கு முறைகள், 1950 ஆகியவற்றின்படி கொதிகலன்கள் மற்றும் கொதிகலன் பாகங்களின் பாதுகாப்பான வடிவமைப்பை கொதிகலன்கள் இயக்குநர் உறுதி செய்கிறார்.

கொதிகலன்கள் மற்றும் கொதிகலன் பாகங்கள், அடைப்பான்கள், பொருத்து பாகங்கள், வார்ப்புகள், தாக்கு வார்ப்புகள், மின்முனைகள் உற்பத்தி செய்யும் தயாரிப்பு நிறுவனங்களுக்கும், சிதைவுறா சோதனை (Non–Destructive Testing) மேற்கொள்ளும் நிறுவனங்களுக்கும் மற்றும் கொதிகலன்கள் பழுதுபார்க்கும் / நிறுவும் நிறுவனங்களுக்கும் கொதிகலன்கள் இயக்குநரிடம் ஒப்புதல் பெறவேண்டும்.

கொதிகலன்கள் இயக்குநர் ஒரு ஆய்வு அதிகாரியாக, கொதிகலன்கள் மற்றும் கொதிகலன் பாகங்கள் உற்பத்தியின் போது சான்றளிப்பதற்கு பொறுப்பு ஆவார் மற்றும் தமிழ்நாட்டில் புதிய கொதிகலன்களை பதிவு செய்வதற்கு பதிவு அதிகாரியாக இவர் செயல்படுகிறார்.

கொதிகலன்கள் இயக்குநர் தமிழ்நாடு அரசின் சார்பாக மத்திய கொதிகலன்கள் வாரியத்தின் உறுப்பினராக செயல்படுகிறார். மத்திய கொதிகலன் வாரியத்தால் உருவாக்கப்பட்ட கொதிகலன் இயக்க பொறியாளர்கள் விதிகள், 2011–ன்படி கொதிகலன் இயக்க பொறியாளர்கள் தேர்வுகள் மற்றும் கொதிகலன் உதவியாளர்கள் விதிகள், 2011–ன்படி கொதிகலன் உதவியாளர்கள் தேர்வுகளையும், தேர்வு வாரியத்தின் தலைவராக கொதிகலன்கள் இயக்குநர் நடத்துகிறார். பல்வேறு வகையான வெல்டிங் செயல்முறைகளில் வெல்டர் தகுதித் தேர்வை நடத்தி, வெல்டர்களுக்குச் சான்றளிக்கும் அதிகாரியாகவும் இவர் செயல்படுகிறார்.

கொதிகலன்கள் துணை இயக்குநர்கள் 465 சதுர மீட்டருக்கு மேற்பட்ட வெப்பமூட்டும் மேற்பரப்பு பகுதி கொண்ட கொதிகலன்களையும் மற்றும் கொதிகலன்கள் முதுநிலை உதவி இயக்குநர்கள்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இராணிப்பேட்டையில் ரூ.118 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகப் பெருந்திட்ட வளாக கட்டடத்தை 30.06.2022 அன்று திறந்து வைத்தார்.

465 சதுர மீட்டர் வரையிலான வெப்பமூட்டும் மேற்பரப்புப் பகுதி கொண்ட கொதிகலன்களையும் முறையே ஆய்வு செய்வார்கள்.

## 6.0 சேவைகள்

### 6.1 செந்தர விலைப் பட்டியல் (Standard Schedule of Rates)

செந்தர விலைப் பட்டியல் குழுவினரால் ஆண்டுதோறும் உள்ளூர் சந்தை விலையின் அடிப்படையில் செந்தர விலைப் பட்டியல் (Standard Schedule of Rates) தயாரிக்கப்படுகிறது, அரசு கட்டடங்கள் கட்டுவதற்கான மதிப்பீடுகள் (அடிப்படை விலையில்) தயாரிக்க செந்தர விலைப் பட்டியல் பயன்படுகிறது. நீர்வளத் துறை, நெடுஞ்சாலைத் துறை, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம், பெருநகர சென்னை மாநகராட்சி போன்ற பொறியியல் துறைகள் மற்றும் பிற அரசு நிறுவனங்களால் இச்செந்தர விலைப் பட்டியல் பயன்படுத்தப்படுகிறது.

2022–2023ஆம் ஆண்டு செந்தர விலைப் பட்டியலில், கட்டுமானத் துறைகளில் பணிகளை

விரைவுபடுத்தும் விதமாக நவீன தொழில் நுட்பத்தை பயன்படுத்தி தயாரிக்கப்படும் முன் தயாரிக்கப்பட்ட கட்டமைப்புகள் (Pre–fabricated Structures) / முன் வார்ப்பெடுத்த கட்டமைப்புகள் (Precast Structures) விலை விவரங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

## 6.2 தளப்பரப்பு விலைப் பட்டியல் (Plinth Area Rate)

தளப்பரப்பு விலைப் பட்டியல் கட்டுமானப் பரப்பளவின் சதுரமீட்டர் அடிப்படையிலான தோராய செலவினமாகும். செந்தர விலைப் பட்டியல் அடிப்படையில் தளப்பரப்பு விலைப் பட்டியல் தயாரிக்கப்படுகிறது. கட்டுமானப் பணிகளில் சதுரமீட்டர் அடிப்படையிலான தோராய மதிப்பீடு தயாரிக்கப் பயன்படுகிறது. தளப்பரப்பு விலைப் பட்டியல் பொதுப்பணித் துறையால் வெளியிடப்பட்டு அனைத்து அரசு பொறியியல் துறைகளால் பயன்படுத்தப்படுகிறது.

இத்தளப்பரப்பு விலைப் பட்டியல் நியாய வாடகை நிர்ணயம் செய்வதற்கும் மற்றும் பதிவுத் துறையில் கட்டடங்களின் பத்திரப் பதிவுக்கான முத்திரைத் தீர்வை நிர்ணயம் செய்வதற்கும் பயன்படுகிறது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 29.06.2022 அன்று புதிதாக கட்டப்பட்டுள்ள திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகப் பெருந்திட்ட வளாகத்தை திறந்து வைத்து மரக்கன்றினை நட்டார்.

## 6.3 கட்டமைப்பு உறுதித்தன்மை சான்றிதழ் (Structural Stability Certificate)

பள்ளிகள், கல்லூரி கட்டடங்கள் மற்றும் திரையரங்கங்கள் போன்ற பல்வேறு பொதுக் கட்டடங்களுக்குக் கட்டமைப்பு உறுதித் தன்மைச் சான்றிதழ் பொதுப்பணித் துறையால் வழங்கப்படுகிறது.

## 6.4 நியாய வாடகைச் சான்றிதழ் (Rent Reasonableness Certificate)

அரசு அலுவலகங்கள் இயங்கிவரும் தனியார் கட்டடங்களுக்கு நியாய வாடகைச் சான்றிதழ் பொதுப்பணித் துறையினால் வழங்கப்படுகிறது.

## 6.5 தொழில்நுட்ப வழிகாட்டல் (Technical Guidance)

தொழில்நுட்ப அறிவுத் திறன் மற்றும் வாழ்க்கை தொழில் வளர்ச்சியினை மேம்படுத்தும் வகையில் பல்வேறு பொறியியல் கல்லூரிகளிலிருந்து வரும் மாணவர்களுக்கு தொழில்நுட்ப வழிகாட்டல் மற்றும் பயிற்சியினை (Internship) பொதுப்பணித் துறை வழங்குகிறது.

## 6.6 மாவட்ட அளவில் பதிவு செய்ய தனியார் பொறியாளர்களின் தேர்ந்த பெயர்ப் பட்டியல் பரிந்துரை

தனியார் பொறியாளர்கள் தொழில்நுட்பச் சேவைகள் வழங்கிட, மாவட்ட அளவில் தனியார்

பொறியாளர்களின் தேர்ந்த பெயர்ப் பட்டியல் பதிவு செய்ய பொதுப்பணித் துறை பொறியாளர் குழுமத்தின் (Board of Engineers) ஒப்புதல் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு பரிந்துரை செய்யப்படுகிறது.

## 6.7 சுற்றுலா மாளிகைகள் மற்றும் ஆய்வு மாளிகைகள் (Circuit Houses and Inspection Bungalows)

மாநிலம் முழுவதும் மிக முக்கிய பிரமுகர்கள் / முக்கிய பிரமுகர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கள ஆய்வின் போது தங்குவதற்கும், சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கும் 65 ஆய்வு மாளிகைகள், 61 சுற்றுலா மாளிகைகள் மற்றும் விருந்தினர் மாளிகைகள் பொதுப்பணித் துறையினால் கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

## 6.8 தொழில்நுட்ப ஆலோசனை சேவைகள் (Technical Consultancy Services)

இந்து சமய அறநிலையத் துறை, சுற்றுலாத் துறை, அருங்காட்சியகத் துறை போன்ற பல்வேறு துறைகளுக்கு கட்டட வடிவமைப்பு, வரைபடங்களைத் தயாரித்தல் மற்றும் கட்டடப் பணிகளுக்கு மதிப்பீடு தயாரித்தல் போன்ற தொழில்நுட்பச் சேவைகளை வழங்கி வருகிறது.



புது தில்லியில் அமைந்துள்ள வைகை-தமிழ்நாடு இல்லத்தினை நவீன வசதிகளுடன் புதுப்பித்து கட்டும் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் 03.01.2023 அன்று புது தில்லியில் தமிழ்நாடு இல்லத்தில் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

## 6.9 அரசுப் பணியாளர் குடியிருப்புகள் (Government Staff Quarters)

சென்னை, சைதாப்பேட்டை, தாடண்டர் நகரில் ரூ.88.49 கோடி மதிப்பீட்டில், 190 'B' வகை குடியிருப்புகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. சைதாப்பேட்டை, தாடண்டர் நகரில் ரூ.99.98 கோடி மதிப்பீட்டில் 190 'சி வகை' குடியிருப்புகள் கொண்ட பன்மாடிக் கட்டடம் கட்டும் பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## 6.10 புதுதில்லி தமிழ்நாடு இல்லம் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு

தமிழ்நாடு அரசின் மதிப்புமிக்க விருந்தினர்கள் மாளிகையான தமிழ்நாடு இல்லம் புதுதில்லியில் அமைந்துள்ளது. இங்கு மாநில அரசு விருந்தினர்கள், மாண்புமிகு அமைச்சர்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோருக்கு உணவு மற்றும் தங்கும் வசதிகள், போக்குவரத்து வசதிகள் அளிக்கப்படுகின்றன.

புதுதில்லியில் உள்ள சாணக்கியபுரி பகுதியில் தமிழ்நாடு இல்லம் இரண்டு இடங்களில் அமைந்துள்ளது. முதல் விருந்தினர் மாளிகை "வைகை

தமிழ்நாடு இல்லம்" 1962 ஆம் ஆண்டு 1.76 ஏக்கர் நிலப்பரப்பில், எண்.6 கௌடில்யா மார்க் என்கின்ற முகவரியில் கட்டப்பட்டது. இவ்வில்லம் 'மெட்ராஸ் ஹவுஸ்' என்று முதன் முதலில் அழைக்கப்பட்டது. அதிக விருந்தினர்கள் வருகையினைத் தொடர்ந்து 1976 ஆம் ஆண்டு இந்த வளாகத்தில் மேலும் ஒரு கூடுதல் கட்டடம் கட்டப்பட்டது.

அதன் பின்னர், 1.97 ஏக்கர் நிலப்பரப்பில் கூடுதல் விருந்தினர் மாளிகை எண்.9 திக்கேந்தர்ஜித் மார்க், சாணக்கியபுரி என்ற முகவரியில் கட்டப்பட்டு 16.9.2004 அன்று திறக்கப்பட்டது. இக்கூடுதல் விருந்தினர் மாளிகை தற்பொழுது, "பொதிகை தமிழ்நாடு இல்லம்" என்று அழைக்கப்படுகிறது.

தமிழ்நாடு வைகை இல்லத்தினை மேம்படுத்தும் பொருட்டு புதிய கட்டடங்கள் கட்டுவதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. விரைவில் இப்பணிகள் துவக்கப்படும்.

## 6.11 கீழடி அருங்காட்சியகம் (Keezhadi Museum)

தமிழர்களின் பண்பாட்டின் முக்கியத்துவம் மற்றும் தொன்மையை நிரூபிக்கும் வகையில், நாகரீகத்தின் நகரிய குடியிருப்பு மற்றும் தொழிற்கூடப் பகுதி



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், கொந்தகை கிராமத்தில் கீழடி அருங்காட்சியத்தை 05.03.2023 அன்று திறந்து வைத்தார்.

இருந்தது சிவகங்கை கீழடி மற்றும் கொந்தகை அகழாய்வில் கண்டறியப்பட்டு, ஆயிரக்கணக்கான தொன்மையான பொருட்கள் தமிழ்நாடு தொல்லியல் துறையால் வெளிக் கொணரப்பட்டுள்ளன.

கீழடி மற்றும் கொந்தகை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் கண்டெடுக்கப்பட்ட தொன்மையான பொருட்களைக் காட்சியகப்படுத்திட 31,000 சதுரடி பரப்பளவில் ரூ.18.43 கோடி செலவில் உலகத்தரம் வாய்ந்த நவீன வசதிகளுடன் கூடிய அருங்காட்சியகம் (Museum) கட்டும் பணி பொதுப்பணித் துறையால் முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 05.03.2023 அன்று திறந்து வைக்கப்பட்டது.

அருங்காட்சியகக் கட்டடங்களின் வடிவமைப்பு, அப்பகுதியில் உள்ள வீடுகளின் கலைநயத்தைப் பறைசாற்றும் விதமாக முற்றம், தாழ்வாரம் மற்றும் மண்டபங்களுடன் அமைக்கப்பட்டுள்ளன.

### 6.12 மழை நீர் சேகரிப்பு (Rain Water Harvesting)

**'விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே**
**பசும்புல் தலைகாண்பு அரிது'.**

**(அதிகாரம் 2, குறள் 16)**

மழைநீர் சேகரிப்பின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, அனைத்து அரசுக் கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்பை உருவாக்கி, மழைநீர் சேகரிப்பை ஊக்குவிக்க பொதுப்பணித் துறை மூலம் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு பணித்தளம் மற்றும் மண் தன்மைக்கு ஏற்றவாறு பல்வேறு வகையான அமைப்புகள் செயற்படுத்தப்படுகின்றன.

இத்துறையின் மூலம் தற்போது பயன்பாட்டிலுள்ள அனைத்து அரசுக் கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் கட்டப்பட்டுள்ளன. மேலும், மழை நீர் சேகரிப்புக் கட்டமைப்பினை புதிய கட்டுமானங்களுக்கான திட்ட மதிப்பீட்டில் சேர்ப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

மழை நீர் சேகரிப்பை திறம்பட மேற்கொள்ளும் பொருட்டு மழைக்காலத்திற்கு முன், தற்போதுள்ள மழை நீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் காலமுறையான ஆய்வு செய்யப்பட்டு, அக்கட்டமைப்புகளின் தரம் உறுதி செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

## 6.13 பேரிடர் மேலாண்மை (Disaster Management)

இயற்கைப் பேரிடர்களைத் தாங்கக் கூடிய வகையில் வலுவான கட்டடங்கள் மற்றும் கட்டமைப்புகளை உருவாக்குவது என்பது பொறியியலின் பங்கை உள்ளடக்கியது ஆகும். இதனால் சமுதாயத்திற்கு ஏற்படக் கூடிய பாதிப்பினைத் தவிர்க்க அல்லது குறைப்பதற்கு இயலும்.

பருவமழை, சூறாவளி காலங்களில் பேரிடர் அபாயக் குறைப்பு என்பது ஒரு பெரிய சவாலாகும். பேரிடர் மற்றும் பேரழிவைத் தடுப்பதற்கு பேரிடருக்கு முன், பேரிடர் காலத்தில் மற்றும் பேரிடருக்கு பின் என்ற மூன்று நிலைகளில் துல்லியமான திட்டமிடல் மற்றும் விரிவான தயார் நிலை தேவைப்படுகிறது.

சூறாவளியின் போது கட்டடத்திற்குள் பெருவெள்ளம், பேரழிவுகளைத் தடுப்பதற்கும் மற்றும் மக்களை வெளியேற்றுவதற்கும் ஏற்றவாறு பேரிடர் தயார் நிலை கட்டமைப்பை பொதுப்பணித் துறை ஏற்படுத்துகிறது.

பொதுப்பணித் துறையால் பராமரிக்கப்படும் அரசு வளாகம் மற்றும் அரசுக் கட்டடங்களில் முனைப்பான கண்காணிப்பு மற்றும் ஆய்வு மேற்கொள்வது தயார்நிலை பணிகளில் அடங்கும். அரசு

மருத்துவமனைகளில் உள்ள தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் மின்சாரம் தடைபடாமல் இருப்பதற்கான ஏற்பாடு உறுதி செய்தல், அரசுக் கட்டடங்களில் நீர்க்கசிவினைத் தடுத்தல், கூரை மற்றும் கட்டடத்தின் உறுதித் தன்மை, பலவீனமாக மற்றும் வலுவற்ற நிலையில் உள்ள கட்டமைப்புகளைக் கண்டறிந்து உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுத்து மேம்படுத்தலுக்கான பணிகள் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 6.14 இயற்கைப் பேரழிவுகளைத் தணிக்கும் நடவடிக்கைகள் (Natural Disasters Mitigation Measures)

ஒவ்வொரு கட்டடமும் குடியிருப்பவருக்கு வசதியை ஏற்படுத்துவது மட்டுமின்றி, தீ விபத்து, நிலநடுக்கம், சுனாமிப் பேரலை, புயல், வெள்ளம் மற்றும் பிற ஆபத்துகளிலிருந்து குடியிருப்போரைப் பாதுகாக்க மிகவும் கவனமாகத் திட்டமிடப்பட்டு, வடிவமைக்கப்பட்டு, கட்டப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகிறது.

தேசிய கட்டட விதித் தொகுப்பு, 2016 (National Building Code, 2016) மற்றும் இந்தியத் தரக்கட்டுப்பாடு அமைவனத்தால் வெளியிடப்படும் விதிகளைப்

பின்பற்றி அரசுக் கட்டடங்கள் கட்டப்படுகின்றன. தீ விபத்து, நிலநடுக்கம், சுனாமிப் பேரலை, புயல், வெள்ளம் மற்றும் பிற இயற்கை இடையூறுகளை தாங்கும் வகையில் கட்டடங்கள் மற்றும் கட்டமைப்புகளின் நிலைத்தன்மை பொதுப்பணித் துறையினால் உறுதி செய்யப்படுகிறது.

## 6.15 மாற்றுத் திறனாளிகளுக்குத் தடைகளற்ற சூழலை உருவாக்குதல்

மாற்றுத் திறனாளிகள் உரிமைகள் சட்டம், 2016–இன்படி மாற்றுத் திறனாளிகளுக்கான தடைகளற்ற சூழலை ஏற்படுத்தும் வகையில் கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பணிகள் அனைத்து வகையான கட்டடங்களிலும் மேற்கொள்ளப் பட்டுள்ளன. மேலும், தடைகளற்ற சூழலை உருவாக்குதல் குறித்த பொது வழிகாட்டுதல்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட இடவசதி அடிப்படையிலும் மாற்றுத் திறனாளிகளுக்கான வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாற்றுத் திறனாளிகளின் தடைகளற்ற சூழலில், எந்த ஒரு மாற்றுத் திறனாளியும், தனியாக பிறருடைய உதவியின்றி ஒவ்வொரு நாளும் செயல்படுவதற்கு

ஏற்ற வகையில் அனைத்துக் கட்டடங்களை வடிவமைப்பதே இலக்காகும்.

கட்டடத்தின் அனைத்து பாதைகளின் சந்திப்புகள், கட்டடத்தின் முக்கியப் பகுதிகளான சாய்வுதளங்கள், கதவுகள், கழிவறைகள், குடிநீர் வசதி போன்ற இடங்களில், குறியீட்டுப் பலகைகள் (Signage) அமைத்தல். கதவுகள் இருக்கும் இடங்களைக் கண்டறியக் கூடிய வகையில் வித்தியாசமான தரை ஓடுகள் (Tactile Tiles) பொருத்துதல், சாய்வுதள அமைப்பு, கழிவறைகளில் வழுக்காத தரை ஓடுகள் (Anti–Skid Tiles) பொருத்துதல் மற்றும் கழிவறைகளின் உட்புறங்களில் கைப்பிடிகள் அமைத்தல்.

மின்தூக்கியின் உட்புறத்தில் கைப்பிடிகள் அமைத்தல், கட்டடத் தளங்களை அறியவும் மற்றும் மின்தூக்கியின் கதவுகள் திறந்து மூடுவதைத் தெரிவிக்கவும், கேட்பொலிக் கருவி நிறுவுதல். மின்தூக்கிகளில் பிரெய்லி வடிவில் உயர்த்தப்பட்ட எழுத்துருக்களைக் (Braille / Raised Letters for Visually Challenged Persons) கொண்ட பொத்தான்களைப் பொருத்துதல்.

தேர்தலின் போது மாற்றுத் திறனாளிகள் எளிதில் வாக்களிப்பதற்கு தடையற்ற சூழலை உருவாக்கும் பொருட்டு அனைத்து வாக்குச் சாவடிகளிலும் சாய்வு தளம் அமைத்தல் போன்றவை மேற்கொள்ளப்படுகின்றன.

## 6.16 கோவிட்–19 தொற்றுநோயை எதிர்த்துப் போராட உதவ மருத்துவ உள்கட்டமைப்பை மேம்படுத்தும் பணிகள்

கோவிட்–19 பெருந்தொற்று காலத்தில் பொதுப்பணித் துறையினால், தேவையான உள்கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டதன் மூலம் கொரோனாவால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதில் இத்துறை மிக முக்கிய பங்காற்றியது.

கொரோனா வார்டுகளில் உள்ள படுக்கைகளுக்கான ஆக்சிஜன் பைப்லைன் பொருத்துதல் மற்றும் அதனைச் சார்ந்த பணிகள் பொதுப்பணித் துறையால் மிகக் குறுகிய காலத்தில் முடிக்கப்பட்டன.

தனிமைப்படுத்தப்பட்ட வார்டுகளை உருவாக்கி அதற்குரிய அத்தியாவசிய வசதிகள், மருத்துவர்கள்

மற்றும் மருத்துவப் பணியாளர்களுக்கு வசதிகள், வழிகாட்டி பலகைகள் மற்றும் தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டன.

மாநிலத்திலுள்ள அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார மையங்களில் 44,098 கொரோனா படுக்கை வசதிகளில் 37,589 எண்ணிக்கையிலான படுக்கைகளுக்கு ஆக்சிஜன் இணைப்புகள் மிகக் குறுகிய காலத்தில் பொதுப்பணித் துறையினால் ஏற்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு கோவிட் அவசர சிகிச்சை தொகுப்பு–2 திட்டத்தின் கீழ் 2096 தீவிர சிகிச்சை பிரிவு ஆக்சிஜன் வசதியுடன் கூடிய படுக்கைகள் ரூ.60.78 கோடி மதிப்பீட்டில் 50 அரசு மருத்துவமனைகள், 37 மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் 116 மாவட்ட துணை மருத்துவமனைகளில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

சென்னை கொளத்தூர் தொகுதியில் உள்ள பெரியார்நகர் அரசு புறநகர் மருத்துவமனையை 300 படுக்கைகள் கொண்ட கோவிட் மருத்துவமனையாகப் புதுப்பொலிவுடன் தரம் உயர்த்தும்

பணிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 23.05.2021 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, ரூ.19.42 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 13.8.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

## 7.0 பாரம்பரிய கட்டடங்கள் பாதுகாத்தல், புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைத்தல் பணிகள் (Conservation Renovation and Restoration of Heritage Buildings)

பாரம்பரிய கட்டடங்களின் வரலாறு, கட்டடக் கலை, கலாச்சாரம் மற்றும் தோற்றப் பொலிவினை பாதுகாப்பது மாநிலத்தின் குறிப்பிடத்தக்க பணியாகும்.

பாரம்பரியக் கட்டடங்களை அதன் தொன்மை மாறாமல் சிறந்த வகையில் பாதுகாத்தல், புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைத்தல் பணிகளை பொதுப்பணித் துறையின் கட்டட மையம் மற்றும் பாதுகாப்புக் கோட்டம் மேற்கொண்டு வருகிறது.

பாரம்பரியமிக்க கட்டடங்களான சென்னை சேப்பாக்கத்தில் உள்ள கலச மஹால், எழும்பூர் நீதிமன்றம் மற்றும் அருங்காட்சியகம், சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் பொதுப்பணித் துறை தலைமை

அலுவலகம் ஆகிய கட்டடங்கள் ஏற்கெனவே பொதுப்பணித் துறையால் புனரமைத்து புதுப்பிக்கப்பட்டுள்ளன.

சென்னை சேப்பாக்கத்தில் உள்ள ஹுமாயூன் மஹால், சென்னை பல்கலைக்கழகம், இராஜாஜி சாலையில் அமைந்துள்ள துணைப் பதிவுத் துறைத் தலைவர் அலுவலகம் மற்றும் தங்க சாலையில் உள்ள அரசு மைய அச்சகம், கோயம்புத்தூரில் உள்ள ஆளுநர் மாளிகை மற்றும் குதிரைவண்டி நீதிமன்றம், சேலம் பழைய தொழிலாளர் நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி பழைய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் (இராணி மங்கம்மாள் அரண்மனை) மற்றும் கொடைக்கானல் கோஹினூர் சேக் அப்துல்லா மாளிகை ஆகிய தொன்மையான கட்டடங்களை புதுப்பித்து பாதுகாக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பல்வேறு மாவட்டங்களில் ரூ.103.74 கோடி மதிப்பீட்டில் 17 பாரம்பரிய கட்டடங்களில் பாதுகாப்பு, புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைத்தல் பணிகள் பொதுப்பணித் துறையால் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.



சென்னை, சேப்பாக்கத்தில் தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட பாரம்பரியமிக்க புராதன கட்டடமான ஹுமாயூன் மஹாலை புனரமைத்தல். மதிப்பீட்டு தொகை:ரூ.41.12 கோடி

## 8.0 நொறுக்கப்பட்ட கல் மணல் (பொதுவாக எம்-சாண்ட் என அழைக்கப்படுகிறது)

கட்டுமானப் பணிகளில் ஆற்று மணலுக்கு மாற்றாகப் நொறுக்கப்பட்ட கல் மணல் பயன்படுத்தப்படுகிறது.

நொறுக்கப்பட்ட கல் மணல் தயாரிக்கும் நிறுவனங்களுக்குத் தேவையான இயந்திரங்கள் மற்றும் மாதிரிகளின் சோதனை முடிவுகளின் அடிப்படையிலும் விதிமுறைகளின்படியும் ஆய்வு செய்து, தொழில்நுட்ப மதிப்பீடு குழு மூலம் அதன் தரத்திற்கு மட்டும் ஒப்புதல் சான்றிதழ் அளிக்கப்படுகிறது. தற்போது 412 எம்-சாண்ட் தயாரிக்கும் நிறுவனங்கள் தலைவர், தொழில்நுட்ப மதிப்பீடு குழு மற்றும் முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை அவர்களிடமிருந்து எம்-சாண்ட் தர ஒப்புதலுக்கான சான்றிதழ் பெற்றுள்ளன.

**<u>எம்-சாண்ட்/ நொறுக்கப்பட்ட மணல் கொள்கை-2023</u>**

எம்-சாண்ட் / நொறுக்கப்பட்ட கல் மணல் தயாரிப்பினை முறைப்படுத்துவதற்காக தமிழ்நாடு எம்-சாண்ட் கொள்கை-2023 (Tamil Nadu M-Sand Policy

2023) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 09.03.2023 அன்று வெளியிடப்பட்டது.

ஆற்று மணலுக்கு மாற்றாக பயன்படுத்தப்பட்டு வரும் எம் சாண்டின் தரம், அவற்றை தயாரிக்கும் முறைகள் மற்றும் எம்–சாண்ட் தயாரிக்கும் நிறுவனங்களை ஒழுங்குபடுத்தும் வழிமுறைகள் போன்ற அம்சங்கள் இக்கொள்கையில் இடம்பெற்றுள்ளன.

**<u>இக்கொள்கையில் பொதுப்பணித் துறைக்கான அம்சங்கள் பின்வருமாறு :–</u>**

- அனைத்து எம்–சாண்ட் நிறுவனங்களும், அவற்றால் தயாரிக்கப்படும் பொருட்களுக்கு இந்திய தர நிர்ணய அமைவனத்திடமிருந்து (BIS) சான்றிதழ் பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
- இந்திய தர நிர்ணய அமைவனத்தின் விதித் தொகுப்பின்படி சான்றிதழ் பெறுவதற்கு பொதுப்பணித் துறையால் வழங்கப்படும் எம்–சாண்ட் தர ஒப்புதலுக்கான சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.
- தற்போதுள்ள அனைத்து எம்–சாண்ட் / நொறுக்கப்பட்ட கல் மணல் உற்பத்தி

நிறுவனங்கள், புவியியல் மற்றும் சுரங்கத் துறை / பொதுப்பணித் துறையால் பரிந்துரைக்கப்படும் காலத்திற்குள், VSI (Vertical Shaft Impactor) அல்லது அதற்கு சமமான பிற மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள் மூலம் எம்–சாண்டின் தரத்தை உயர்த்தி கொள்ளவும் மற்றும் தமிழ்நாடு சட்டத்திற்கு புறம்பான சுரங்கத் தொழில், கனிமங்கள் போக்குவரத்து மற்றும் சேமிப்பு தடுப்பு மற்றும் கனிம விற்பனையாளர்கள் விதிகள், 2011 கீழ் பதிவு செய்து கொள்ள ஒரு முறை சலுகை வழங்கப்படும்.

- எம்–சாண்ட் தயாரிக்கும் நிறுவனங்கள் கண்டிப்பாக தங்களது நிறுவனங்களில் தர பரிசோதனை ஆய்வகம் அமைத்து ஒவ்வொரு நாளும் தயாரிக்கப்படும் எம்–சாண்டின் தர பரிசோதனை செய்து, உரிய பதிவேடுகளில் பதிவு செய்திடல் வேண்டும். அப்பதிவேடுகள் புவியியல் மற்றும் சுரங்கத் துறை / பொதுப்பணித் துறையால் சரி பார்க்கப்படும்.
- எம்–சாண்ட் தயாரிக்கும் நிறுவனங்கள் தாங்கள் தயாரிக்கும் எம்–சாண்ட்

பொருட்கள் மற்றும் தூய்மை செய்ய பயன்படுத்தப்படும் நீரின் தன்மையையும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை National Accreditation Board for Testing and Calibration Laboratories (NABL) / பொதுப்பணித் துறை / புவியியல் மற்றும் சுரங்கத் துறை / பல்கலைக் கழக ஆய்வகங்களில் கட்டாயமாக தர சோதனை செய்து அதன் அறிக்கையை பொதுப்பணித் துறை / புவியியல் மற்றும் சுரங்கத் துறை/ மாசுக் கட்டுபாடு வாரியத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

- எம்–சாண்ட் பொருட்களின் தரத்தினை சரிபார்க்க குறிப்பிட்ட இடைவெளியில் சோதனைகள் மேற்கொள்ள பொதுப்பணித் துறை / புவியியல் மற்றும் சுரங்கத் துறை அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## 9.0 மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் / சிறப்புத் திட்டங்கள் (Iconic Projects)

## 9.1 முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நூலகம்

03.06.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் நினைவாக மதுரையில் சிறந்த சர்வதேச



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மதுரையில் கட்டப்பட்டு வரும் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நூலகத்தின் கட்டுமானப் பணிகளை 07.06.2022 அன்று ஆய்வு செய்தார்.

நூலகங்களுக்கு இணையாக பொதுநூலகம் கட்டப்படும் என்று அறிவித்தார்.

மதுரையில் "கலைஞர் நினைவு நூலகம்" கட்டுவதற்கு பொது நூலக இயக்குனரகத்தின் தேவைகளின்படி ரூ.114 கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, 2,00,250 சதுரடி பரப்பளவு கொண்ட தரைத் தளம் மற்றும் ஆறு தளங்களுடன் பிரம்மாண்டமான நூலகக் கட்டடம் கட்டுமானப் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன.

சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய நல்ல கற்றல் சூழலை உருவாக்கும் விதமாக, இந்த நூலகத்தில் பார்வையற்றோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான அரிய புத்தகங்கள் பிரிவு, போட்டித் தேர்வு புத்தகங்கள் பிரிவு, குழந்தைகள் புத்தகங்கள் பிரிவு, டிஜிட்டல் நூலகப் பிரிவுகள் என பல்வேறு பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. மின்தூக்கி, நகரும் படிகட்டுகள் மற்றும் சாய்தளம் போன்ற வசதிகள், வயதானவர்கள், குழந்தைகள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் நூலக கட்டடத்தின் அனைத்து தளங்களையும் அணுகுவதை எளிதாக்குகிறது.

## 9.2 அண்ணா நூற்றாண்டு நூலகம்

அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களால் 16.08.2008 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு சென்னை கோட்டூர்புரத்தில் பொதுப்பணித் துறை மூலம் கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இது உலகளவில் பாராட்டப்படும் தெற்காசியாவின் மிகப்பெரிய நூலகமாகும். இந்த நூலகம் சாதாரண மற்றும் ஏழை மாணவர்கள் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் நவீன வசதிகளுடன் கூடிய சர்வதேச தரத்தில் அமைந்துள்ளது. இந்த நூலகத்தில் பார்வையற்றோருக்கான பிரெய்லி புத்தகப் பிரிவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இந்த நூலகக் கட்டடத்தை புனரமைத்தல், புதுப்பித்தல் பணிகள் ரூ.32.48 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு நிறைவடைந்துள்ளன.

## 9.3 முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நினைவிடம் அமைத்தல்

மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களுக்கு



தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் திரு.கி.ராஜநாராயணன் அவர்களுக்கு திருவுருவச் சிலையுடன் கூடிய நினைவு மண்டபம் மற்றும் நூலகக் கட்டடம். மதிப்பீட்டு தொகை:ரூ.1.51கோடி.

நினைவிடம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 24.08.2021 அன்று அறிவித்தார்கள். அதன்படி சென்னை காமராஜர் சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா நினைவக வளாகத்தில் 2.21 ஏக்கர் பரப்பில் நினைவிடம் ரூ.39 கோடி மதிப்பீட்டில் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 9.4 சென்னை வள்ளுவர் கோட்டம் புனரமைப்பு பணிகள்

வள்ளுவர் கோட்டம் முழுவதும் திராவிட கட்டடக்கலை பிரதிபலிக்கும் வகையில் 1974–1976 ஆம் ஆண்டு அப்போதைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டது.

பார்வையாளர்களுக்கு திருக்குறளின் பெருமையை வெளிப்படுத்தும் நோக்கத்துடன் வள்ளுவர் கோட்டத்தினை அதன் அசல் கட்டமைப்பு மாறாமல் நவீன வசதிகளுடன், புனரமைக்கும் பணி மேற்கொள்ளப்படும். புதிய நூலகம், கலந்துரையாடல் வசதிகள், ஒலி–ஒளி காட்சி, உணவகம் மற்றும் பொதுமக்களுக்கான பிற வசதிகளுடன் கலையரங்கம்

நவீன முறையில் பொதுப்பணித் துறையால் புதுப்பிக்கப்படவுள்ளது.

## 9.5 எழுத்தாளர் திரு. கி. இராஜநாராயணன் அவர்களுக்கு நினைவகம்

புகழ்பெற்ற தமிழ் எழுத்தாளர் மற்றும் நாட்டுப் புறவியலாளரான திரு.கி. இராஜநாராயணன் அவர்களுக்கு நூலகத்துடன் கூடிய மணிமண்டபம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 03.06.2021 அன்று அறிவித்தார்கள். தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் உள்ள வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் 2981 சதுரடி பரப்பளவில் நூலகத்துடன் கூடிய நினைவகம் ரூ.1.50 கோடி செலவில் கட்டும் பணி முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 02.12.2022 அன்று திறந்து வைக்கப்பட்டது.

## 9.6 சென்னை நந்தனத்தில் எம்.சி.ராஜா விடுதி வளாகத்தில் புதிய மாணவர் விடுதி கட்டும் பணி

சென்னை நந்தனத்தில் உள்ள எம்.சி.ராஜா கல்லூரி மாணவர் விடுதி வளாகத்தில் தற்போது காலியாக உள்ள இடத்தில் நவீன வசதிகளுடன்





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை, கிண்டி, கிங் நோய் தடுப்பு மருந்து மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் 230 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையின் கட்டுமானப் பணிகளை 03.08.2022 அன்று ஆய்வு செய்தார்.

ரூ.44.50 கோடி செலவில் தரை தளம் மற்றும் 10 தளங்களில் 121 அறைகளுடன் 484 மாணவர்கள் தங்கும் வகையில் புதிய மாணவர் விடுதி கட்டடம் கட்டும் பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## 9.7 சென்னையில் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை

சென்னை, கிண்டி, கிங் நோய் தடுப்பு மருந்து மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை அமைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 03.06.2021 அன்று அறிவித்தார்கள்.

சென்னை, கிண்டியில், கிங் நோய் தடுப்பு மருந்து மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் ரூ.230 கோடி மதிப்பீட்டில் 1000 படுக்கைகள் வசதியுடன் கூடிய பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை அமைப்பதற்கு 4.89 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு தரைத்தளம் மற்றும் ஆறு தளங்களுடன் கூடிய 5,53,376 சதுரடி பரப்பளவில் அனைத்து வகையான வசதிகளுடன் அமைய உள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 21.03.2022 அன்று

அடிக்கல் நாட்டப்பட்டு கட்டுமானப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

## 9.8 பேராசிரியர் க.அன்பழகன் அவர்களின் நினைவாக நூற்றாண்டு நுழைவாயில் வளைவு

பேராசிரியர் அன்பழகன் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி சென்னை, நுங்கம்பாக்கத்தில் உள்ள பள்ளிக்கல்வித் துறையின் டி.பி.ஐ. வளாகத்தினை "பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்" எனப் பெயரிட்டு, அவ்வளாகத்தில் ரூ.85 இலட்சம் செலவில் பொதுப்பணித் துறையால் கட்டப்பட்டுள்ள பேராசிரியர் அன்பழகன் நூற்றாண்டு வளைவினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 19.12.2022 அன்று திறந்து வைத்தார்.

## 9.9 ஜல்லிக்கட்டு அரங்கம்

மதுரை மாவட்டம், கீழக்கரை கிராமத்தில் ஜல்லிக்கட்டு அரங்கம் கட்டப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 21.01.2022 அன்று அறிவித்தார்கள். அதன்படி, மதுரை மாவட்டம், கீழக்கரை கிராமத்தில் ரூ.44 கோடி மதிப்பீட்டில்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை டிபிஐ வளாகத்திற்கு 'பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்' என பெயரிட்டு அவ்வளாகத்தில் கட்டடப்பட்டுள்ள பேராசிரியர் அன்பழகன் நூற்றாண்டு வளைவினை 19.12.2022 அன்று திறந்து வைத்தார்.

16 ஏக்கர் நிலப்பரப்பில் ஜல்லிக்கட்டு அரங்கம் கட்டும் பணி நடைபெறுகிறது.

ஜல்லிகட்டு அரங்கம், மூன்று அடுக்குகளுடன் 3700 பேர் அமரும் வகையிலும் மற்றும் முக்கிய பிரமுகர்கள் இருக்கைகள், நுழைவு வாயில், அருங்காட்சியகம், காளை கொட்டகை (Bull Shed), வாடிவாசல் அருகே காளைகள் நிற்கும் இடம் (Bull Burn), கால்நடை மருந்தகம், விரைவான முதலுதவி மற்றும் தொடர்ச்சியான மருத்துவ உதவி அளிக்கும் வகையில் துணை சுகாதார மையம் மற்றும் வீரர்கள், ஊடகவியலாளர்கள், பார்வையாளர்கள் போன்ற அனைவருக்கும் தேவையான அடிப்படை மற்றும் அத்தியாவசிய வசதிகளுடன் அமைக்கப்பட உள்ளது.

## 10.0 நினைவகங்கள் மற்றும் மணிமண்டபங்கள்

விடுதலை போராட்ட வீரர்கள், அறிஞர் பெருமக்கள் மற்றும் மாபெரும் தலைவர்கள் போன்றோரை நினைவு கொள்ளும் வகையில் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் நினைவிடங்கள் /

நினைவகங்கள் பொதுப்பணித் துறையால் அமைக்கப்பட்டு மற்றும் பராமரிக்கப்பட்டு வருகிறது.

புதிய அரசு பொறுப்பேற்ற பின்னர், நினைவகங்கள், சிலைகள், மணிமண்டபங்கள் கட்டுமானப் பணிகள் மற்றும் நினைவகங்கள் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் தொடர்புடைய ரூ.62.76 கோடி மதிப்பீட்டிலான 20 பணிகள் பொதுப்பணித் துறையால் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

தஞ்சாவூரிலுள்ள மாமன்னர் இராசராச சோழன் மணிமண்டபத்தில் ரூ.3.66 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துதல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## 11.0 அரசு கட்டடங்கள் பராமரிப்பு

### 11.1 பொதுப்பணித் துறைக்குச் சொந்தமானக் கட்டடங்கள் பராமரிப்பு

பொதுப்பணித் துறை கட்டடங்கள் மானிய கோரிக்கை எண்.39 கீழ் 2023–2024ஆம்




மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள், பொதுப்பணித் துறை பொறியாளர்கள் மற்றும் கட்டடக் கலைஞர்களுக்கான 'நவீன கட்டுமான தொழில்நுட்பங்கள் மற்றும் செய்நுட்ப அறிவு' பற்றிய ஒரு நாள் பயிற்சியினை 17.03.2023 அன்று சென்னையில் துவக்கி வைத்தார்.



மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் சென்னை. சைதாப்பேட்டை, தாடண்டர் நகரில் கட்டப்பட்டு வரும் புதிய அரசு பணியாளர்கள் குடியிருப்பு கட்டடத்தை 09.11.2022 அன்று ஆய்வு செய்தார்.

ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், அமைச்சர்களின் அரசு மாளிகைகள், ஆய்வு மாளிகைகள், சுற்றுலா மாளிகைகள், பொதுப்பணித் துறை அலுவலகங்கள் மற்றும் அரசு அலுவலர் குடியிருப்புகள் ஆகியவற்றின் பராமரிப்பு மற்றும் பழுது பார்க்கும் பணிகளை மேற்கொள்ள ரூ.137 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 11.2 இதர துறைகளின் கட்டடங்கள்

ஆளுநர் மாளிகை, தலைமைச் செயலகம், உயர்நீதிமன்றம், மாவட்ட மற்றும் சார்பு நீதிமன்றக் கட்டடங்கள், உயர் நீதிமன்ற நீதியரசர்களின் அரசு மாளிகைகள், சட்டமன்ற உறுப்பினர் அலுவலகக் கட்டடங்கள், மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரிகள், ஆரம்ப மற்றும் துணை சுகாதார நிலையங்கள், பள்ளிகள், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை மற்றும் பதிவுத் துறை அலுவலகக் கட்டடங்கள் மற்றும் பிற அரசு கட்டடங்களின் பராமரிப்பு, பழுதுபார்க்கும் பணிகளுக்காக 2023–2024ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.482.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 12.0 துறை வாரியான கட்டடப் பணிகள்

### 12.1 வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் உள்ள தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி நிறுவனம் (TNSTI) குளிர்பதன சேமிப்புக் கட்டடம் கட்டும் பணி ரூ.2.40 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது.

### 12.2 கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

நபார்டு வங்கி நிதி உதவியுடன் கால்நடை பராமரிப்புத் துறையின் கீழ் கால்நடை மருத்துவமனைகள், கால்நடை மருந்தகங்கள், கால்நடை சிகிச்சை மையம் மற்றும் கால்நடை நோய்ப் புலனாய்வு பிரிவு கட்டடங்கள் பொதுப்பணித் துறையினால் கட்டப்பட்டு வருகின்றன.

சேலம் மாவட்டம், தலைவாசல் கூட்டு ரோட்டில் ஒருங்கிணைந்த கால்நடை ஆராய்ச்சி மற்றும் விலங்கியல் அறிவியலுக்கான நவீன நிறுவனம் அமைப்பதற்காக மொத்தம் ரூ.196.86 கோடி மதிப்பீட்டிலான 10 பணிகளில், பிரதான பணிகள்

முடிக்கப்பட்டு இதர உப பணிகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வளாகத்தில் ரூ.1.61 கோடி மதிப்பீட்டில் எல்லை சுற்றுச்சுவர் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையில் ரூ.154.26 கோடி மதிப்பீட்டில் 460 பணிகளில் கால்நடை மருந்தகங்கள், கால்நடை மருத்துவமனை, கால்நடை சிகிச்சை மையம் மற்றும் கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவு கட்டடங்கள் போன்ற கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ.47 கோடி மொத்த மதிப்பீட்டிலான 144 கட்டுமானப் பணிகளில், ரூ.29.95 கோடி மதிப்பிலான 111 பணிகள் நடைபெற்று வருகின்றன. ரூ.17 கோடி மதிப்பீட்டிலான 33 கட்டுமானப் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

சென்னை வேப்பேரியில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரியின் பாரம்பரிய நிர்வாக கட்டடத்தினை பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் ரூ.4.64 கோடி மதிப்பீட்டில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

## 12.3 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

நபார்டு திட்டத்தின் கீழ் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் மாணவர்களுக்கான கள்ளர் தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு சூரிய ஆற்றல் அமைப்புடன் கூடிய விடுதிக் கட்டடங்கள், கூடுதல் வகுப்பறைகள், கூடுதல் கழிப்பறைகள், சுற்றுச்சுவர் மற்றும் ஆழ்துளைக் கிணறு கட்டுமானப் பணிகள் மற்றும் 4 இடங்களில் வக்ஃபு வாரியம் மண்டல அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணிகள் ரூ.233.64 கோடி மதிப்பிலான 621 கட்டுமான பணிகளில், 483 பணிகள் ரூ.134 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. 117 பணிகள் ரூ.76.42 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. ரூ.23.17 கோடி மதிப்பீட்டில் எஞ்சிய 21 பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

## 12.4 கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

கூட்டுறவு வங்கி, ஒருங்கிணைந்த கூட்டுறவு பெருந்திட்ட வளாகம் மற்றும் கூட்டுறவு பயிற்சி நிறுவனத்தின் கட்டுமானப் பணிகள் பயன்பாட்டுத்



அரசினர் பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி கட்டடம், ஓசூர்
மதிப்பீட்டு தொகை:ரூ.3.69 கோடி

துறையின் கோரிக்கையின் பேரில் பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.

சென்னை சாலிகிராமத்தில் ரூ.7.30 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு கூட்டுறவு கூட்டமைப்பிற்கான வளாகத்தில் அலுவலகம் மற்றும் கிடங்கு கட்டும் பணி மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள ஆத்தூர் வட்டத்தில் ரூ.75.75 கோடி மதிப்பீட்டில் புதிய கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டும் பணி ஆகிய இரண்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டத்தில் உள்ள மன்னவனூர் கிராமத்தில் தேசிய அளவிலான கூட்டுறவு ஆய்வுகள், ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு ரூ.126 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டும் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

## 12.5 வணிக வரி மற்றும் பதிவுத் துறை

வணிகவரி அலுவலகங்கள், ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகங்கள், ஒருங்கிணைந்த பதிவுத் துறை அலுவலகங்கள் மற்றும் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் கட்டுமானம் மற்றும்

அவற்றின் பராமரிப்பு பணிகள், பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடம், பதிவுத் துறையின் பாரம்பரியக் கட்டடத்தினைப் புதுப்பிக்கும் பணி, ஒருங்கிணைந்த சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி, ஒருங்கிணைந்த பதிவுத் துறை அலுவலக வளாகம் மற்றும் துணைப் பதிவுத் துறைத் தலைவர் முகாம் அலுவலகக் கட்டடம், மாவட்ட பதிவாளர் அலுவலகம் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த பதிவுத் துறை அலுவலகம் கட்டுதல் போன்ற ரூ.114.88 கோடி மதிப்பீட்டிலான 30 கட்டட பணிகளில், ரூ.28.61 கோடி மதிப்பீட்டிலான 11 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன, ரூ.83.55 கோடி மதிப்பீட்டிலான 17 பணிகள் நடைபெற்று வருகின்றன. ரூ.2.72 கோடி மதிப்பீட்டிலான 2 பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

## 12.6 சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும், வனத்துறை சார்ந்த கட்டடங்களான, வனத் துறை தலைமை அலுவலகம், வன விலங்குகள்

ஆய்வகம் மற்றும் சர்வதேச தரநிலை விடுதி (ஆராய்ச்சி மற்றும் கல்வி) போன்ற கட்டுமானப் பணிகள் பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சுற்றுச் சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறையின் சார்பாக ரூ.38.35 கோடி மதிப்பீட்டில் 2 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும் சேலம் மாவட்டம், தளவாய்ப்பட்டியில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம் மற்றும் ஆய்வகக் கூடம் கட்டும் பணி ரூ.6.42 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது.

## 12.7 மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறை

கள்ளக்குறிச்சி, திருவள்ளூர், கிருஷ்ணகிரி, மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் உள்ள புதிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக் கட்டடங்கள் ரூ.662.98 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது.

அரியலூர், நாமக்கல் மற்றும் திண்டுக்கல், ஆகிய மருத்துவமனை கட்டடங்கள் ரூ.410.87 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டது.

திருப்பூர், நாகப்பட்டினம் மற்றும் இராமநாதபுரம் புதிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக் கட்டடங்கள் ரூ.408.76 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் உதகமண்டலம் புதிய அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.461.18 கோடி மதிப்பீட்டில் மருத்துவமனை, கல்லூரி மற்றும் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

ஜப்பான் நாட்டு நிதி உதவியுடன் சர்வதேசத் தரத்தில் 3 புதிய மூன்றாம் நிலை சிகிச்சை மருத்துவமனை மற்றும் 4 புதிய இரண்டாம் நிலை சிகிச்சை மருத்துவமனை கட்டடங்கள் முறையே சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருவள்ளூர், சேலம், திருப்பூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் ரூ.615 கோடி மதிப்பீட்டில் கட்டுமானப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன.

**பிற மருத்துவப் பணிகள்**

திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் கன்னியாகுமரி மருத்துவக் கல்லூரிகளில் சில கட்டடங்கள் கட்டும் பணி, மதுரை மருத்துவக் கல்லூரியில் பயிலக கட்டடம் மற்றும் செவிலியர் குடியிருப்பு கட்டடம், சென்னை எழும்பூரில் உள்ள

மண்டல கண் மருத்துவ நிலையம் மற்றும் அரசு கண் மருத்துவமனைக்கான இருநூற்றாண்டு கட்டடம் போன்ற கட்டுமானப் பணிகள், செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் உலகத் தரம் வாய்ந்த சர்வதேச யோகா மற்றும் இயற்கை மருத்துவ அறிவியல் மையக் கட்டடம் கட்டுதல் ஆகிய பணிகள் ரூ.341.46 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளன.

ஈரோட்டில் அரசு தலைமை மருத்துவமனையில் உயர் சிறப்பு மருத்துவமனை கட்டடம், புதுக்கோட்டையில் புதிய அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை கட்டடம் மற்றும் சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள அரசு கஸ்தூரிபா காந்தி மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் ஏற்கனவே உள்ள (G+3) தளத்தின் மேல் கூடுதல் தளங்கள் அமைக்கும் பணிகள் ரூ.137.35 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

### 12.7.1 தேசிய நலவாழ்வு குழுமம் (National Health Mission)

தமிழ்நாட்டில், தேசிய நலவாழ்வு குழுமத்தின் நிதியின் கீழ் ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், மகப்பேறு மற்றும் குழந்தைகள்

நலப்பிரிவு கட்டடங்கள், ஒருங்கிணைந்த அவசர பேறுகாலக் குழந்தைகள் நலப்பிரிவு, பச்சிளங் குழந்தைகள் நலமையம், செவிலியர் குடியிருப்பு, புறநோயாளிகள் பிரிவு மற்றும் அவசரகால சிகிச்சைப் பிரிவு கட்டடங்கள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

19 அரசு மருத்துவமனைகளை ரூ.856.85 கோடி மதிப்பீட்டில் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளாக தரம் உயர்த்துவதற்கு கூடுதல் கட்டடம் கட்டுதல், 6 மருத்துவமனைகளின் கட்டமைப்புகளை மாவட்ட மருத்துவமனைகளுக்கு இணையாக ரூ.162 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துதல், 12 மாவட்ட அரசு மருத்துவமனைகளில் ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வகம் ரூ.15 கோடி மதிப்பீட்டில் அமைத்தல், 21 மருத்துவமனைகளில் புதிய தாய் சேய் நல கட்டடம் ரூ.251.34 கோடி மதிப்பீட்டில் அமைத்தல் மற்றும் 10 அரசு மருத்துவமனைகளில் அவசரகால சிகிச்சை பிரிவு கட்டடங்கள் ரூ.253.80 கோடி மதிப்பீட்டில் அமைத்தல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

சென்னை கீழ்ப்பாக்கத்தில் உள்ள மனநல மருத்துவ நிலையத்தில் ரூ.35 கோடி மதிப்பீட்டில்

தமிழ்நாடு மனநல மற்றும் நரம்பியல் நிலையத்தின் (TNIMHANS) ஒப்புயர்வு மையக் கட்டடம் கட்டும் பணி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 22.12.2022 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் செயலாக்கத்தில் உள்ளன.

25 அரசு மருத்துவமனைகளில் பச்சிளங் குழந்தைகளின் செவித்திறன் கண்டறிவதற்காக, ஒலி புகா அறை அமைக்கும் பணி ரூ.3 கோடி மதிப்பீட்டிலும் மதுரை, அரசு இராஜாஜி மருத்துவமனையில் புதிய குழந்தைகள் பிரிவு கட்டடம் கட்டும் பணி ரூ.20 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்பட உள்ளன.

### 12.7.2. தமிழ்நாடு சுகாதார அமைப்பு சீர்திருத்தத் திட்டம் (Tamil Nadu Health System Reform Program)

காஞ்சிபுரம் மாவட்டம், காரப்பேட்டை அரசு அறிஞர் அண்ணா புற்றுநோய் மருத்துவமனையில் ரூ.118.46 கோடி மதிப்பீட்டில் புற்றுநோய் ஒப்புயர்வு மையத்திற்கு (தரை மற்றும் இரண்டு தளங்களுடன்) கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது. மேலும், மூன்றாம், நான்காம் மற்றும் ஐந்தாம் தளங்கள் கட்டும் பணிகள் ரூ.100 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

சென்னை – கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புதிய கட்டடம் கட்டும் பணி ரூ.125 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

சென்னை பெரியார் நகர் அரசு வட்டார மருத்துவமனையினை பலப்படுத்தும் பணிகள் மற்றும் புதிய கட்டடம் கட்டும் பணிகள் ரூ.55 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

சென்னை–ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில், நரம்பியல் பிரிவு கட்டடம் கட்டும் பணிகள் ரூ.60 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

உத்திரமேரூர், திருப்பத்தூர், சாத்தூர், விருதுநகர், வந்தவாசி, செங்கம், பாலக்கோடு, விருத்தாச்சலம், ஏற்காடு, களக்காடு, இராஜதானி, உத்தமபாளையம், பெரியகுளம் மற்றும் திருமயம் ஆகிய இடங்களில் மருத்துவமனைக் கட்டடங்கள் கட்டும் பணிகள் ரூ.45.32 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

### 12.7.3 பிரதான் மந்திரி ஜன் விகாஸ் காரியக்ரம் யோஜனா (PMJVK)

வேலூர், வாணியம்பாடி, ஆம்பூர், திருச்செந்தூர், காயல்பட்டினம், தூத்துக்குடி, தென்காசி.

மேலப்பாளையம் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் மருத்துவமனைகள் கட்டும் பணிகள் ரூ.583.42 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

## 12.8 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை

மாவட்ட நகர ஊரமைப்பு இயக்ககத்திற்காக திருவள்ளூர், காஞ்சிபுரம், அரியலூர், தஞ்சாவூர், விழுப்புரம், கரூர், நாகப்பட்டினம், நாமக்கல், பெரம்பலூர், திண்டுக்கல், புதுக்கோட்டை, திருவாரூர், இராமநாதபுரம், தென்காசி, தேனி, திருவண்ணாமலை, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் ரூ. 60 கோடி மதிப்பீட்டிலான மாவட்ட நகர மற்றும் கிராம திட்டமிடல் அலுவலக கட்டடங்களின் கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

## 12.9 மனிதவள மேலாண்மைத் துறை

மனிதவள மேலாண்மைத் துறையில் ஈரோடு மாவட்டம், பவானிசாகர் குடிமைப் பணி பயிற்சி மைய வளாகத்தில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணி ரூ.10 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. சென்னை, அண்ணா நிர்வாக பணியாளர் கல்லூரி வளாகத்தில் கூடுதல் பணியாளர் குடியிருப்பு கட்டுதல்

பணி ரூ.3.48 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

## 12.10 தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை

புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் மொத்தம் ரூ.33 கோடி மதிப்பீட்டிலான 4 கட்டடக் கட்டுமானப் பணிகளில், ரூ.2 கோடி மதிப்பீட்டில் 1 பணி நடைபெற்று வருகின்றது மற்றும் ரூ.31 கோடி மதிப்பீட்டில் 3 பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

## 12.11 நீதித் துறை

நீதித் துறை சார்ந்த அனைத்து வகையான கட்டடப் பணிகளான நீதிமன்றக் கட்டடங்கள் / ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள், குடியிருப்புக் கட்டடங்கள், பாதிக்கப் படக்கூடிய சாட்சிகள் மற்றும் சிறார் சாட்சிகள் (Vulnerable Witness and Child Deposition Centre Buildings) விசாரிக்கும் கட்டடம், சிறார்களுக்கு எதிரான குற்றங்களை விசாரிக்கும் கட்டடம் (POCSO Building) மற்றும் மகளிர் நீதிமன்றக் கட்டடங்கள் (Mahila court buildings) ஆகியவை பொதுப்பணித் துறையினால் கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 25.03.2023 அன்று மதுரை மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற விழாவில் மாண்பமை உச்சநீதிமன்ற தலைமை நீதியரசர் டாக்டர்.டி.ஒய்.சந்திர சூட் அவர்கள் முன்னிலையில் மயிலாடுதுறை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தை திறந்து வைத்தார்.

ரூ.972.23 கோடி மதிப்பீட்டிலான ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகக் கட்டடங்கள் மற்றும் நீதியரசர்கள் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டுவதற்கான 50 கட்டுமானப் பணிகளில், 14 இடங்களில் ரூ.139.24 கோடி மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ.236.40 கோடி மதிப்பீட்டில் 26 பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் 10 இடங்களில் ரூ.596.59 கோடி மதிப்பீட்டில் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

மதுரையில் மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் ரூ.166 கோடி மதிப்பீட்டிலான கூடுதல் நீதிமன்ற கட்டடங்கள் கட்டும் பணிக்கு மாண்புமிகு இந்திய தலைமை நீதியரசர் அவர்களால் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் 25.03.2023 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. மயிலாடுதுறையில் உள்ள மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களாலும் மற்றும் மயிலாடுதுறையிலுள்ள தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ஒன்றிய அரசின் மாண்புமிகு அமைச்சர் சட்டம் மற்றும் நீதி அவர்களாலும் அதே நாளன்று திறந்து வைக்கப்பட்டது.

## 12.12 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறைக்குட்பட்ட ஒருங்கிணைந்த தொழிலாளர் அலுவலகங்கள், தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் விடுதிகள் கட்டுதல் மற்றும் அதன் பராமரிப்புப் பணிகள் பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், 71 அரசு தொழிற் பயிற்சி நிலையங்களை – 4.0 தொழிற்சாலை தரத்திற்கு நவீன மயமாக்கும் கட்டடப் பணிகளில், 69 அரசு தொழிற் பயிற்சி நிலையங்களின் பணிகள் பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையில் ரூ.438.09 கோடி மதிப்பீட்டிலான 115 கட்டுமானப் பணிகளில், 18 பணிகள் ரூ.70.41 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. ரூ.311.48 கோடி மதிப்பீட்டிலான 80 பணிகள் நடைபெற்று வருகின்றன. ரூ.56.20 கோடி மதிப்பீட்டிலான 17 கட்டுமானப் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.



காஞ்சிபுரம் மாவட்டம், ஒரகடத்தில் அரசு தொழில் பயிற்சி நிலைய தொழில்நுட்ப பணிமனை கட்டடம்
மதிப்பீட்டு தொகை:ரூ.3.73 கோடி

## 12.13 சட்டத் துறை

ரூ.462.68 கோடி மதிப்பீட்டில் 11 சட்டக் கல்லூரிகள் மற்றும் விடுதிகள் கட்டும் பணிகளில், ரூ.93.71 கோடி மதிப்பீட்டில் 2 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ.310.55 கோடி மதிப்பீட்டில் 4 பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் 5 இடங்களில் ரூ.58.42 கோடி மதிப்பீட்டில் பணிகள் விரைவில் செயலாக்கத்திற்கு கொண்டு வரப்படும்.

## 12.14 பொதுப்பணித் துறை

பொதுப்பணித் துறையில் 75 கட்டுமானப் பணிகளின் மதிப்பீடு ரூ.562.75 கோடி, அதில் ரூ.24.77 கோடி மதிப்பீட்டில் 17 பணிகள் முடிக்கப்பட்டன. 36 பணிகள் ரூ.318.42 கோடியில் நடைபெற்று வருகின்றன. 22 பணிகள் ரூ.219.56 கோடியில் மேற்கொள்ளப்படவுள்ளன.

**முடிக்கப்பட்ட பணிகளின் விவரங்கள் :**

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1. | மதுரை தல்லாகுளம் பொதுப்பணித் துறை வளாகத்தில் உபகோட்ட அலுவலக கட்டடம் கட்டும் பணி | 0.75 |

| | | |
|---|---|---|
| 2. | திண்டுக்கல்லில் உபகோட்ட அலுவலகக் கட்டடம் கட்டும் பணி | 0.45 |
| | **பாரம்பரியக் கட்டடங்கள்– பாதுகாத்தல், புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைத்தல் பணிகள்** | |
| 3. | தஞ்சாவூர் கல்லணை கால்வாய் கோட்ட செயற்பொறியாளர் குடியிருப்பு | 1.23 |
| 4. | மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் | 2.47 |
| 5. | விருதுநகர் மாவட்டம், பாளையம்பட்டியில் உள்ள மாவட்ட கல்வி நிலையம் மற்றும் பயிற்சி மையம் | 2.20 |
| 6. | கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், திருவட்டாறில் உள்ள பாரம்பரிய பயணியர் மாளிகை | 0.51 |
| 7. | திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசியில் உள்ள உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்ற கட்டடம் | 0.82 |



மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் 10.10.2022 அன்று பொதுப்பணித் துறையில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய மிக முக்கியமான தரக்கட்டுப்பாடு வழிகாட்டுதல்கள் அடங்கிய கையேட்டினை வெளியிட்டார்.

| | | |
|---|---|---|
| 8. | திருச்சிராப்பள்ளி, முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்ற கட்டடம் | 1.34 |
| 9. | இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் உள்ள பழைய உரிமையியல் நீதிமன்ற கட்டடம் மற்றும் சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் உள்ள உரிமையியல் நீதிமன்ற கட்டடம் | 3.05 |
| 10. | தேனி மாவட்டம், பெரியகுளத்தில் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தின் அருகில் உள்ள சார்பு குற்றவியல் நடுவர் நீதிமன்ற கட்டடம் | 0.80 |
| 11. | தஞ்சாவூர் அரண்மனையின் மூத்த இளவரசர் குடியிருப்பு | 2.45 |
| 12. | கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், புலியூர்குறிச்சி, உதயகிரி கோட்டை அருகில் உள்ள பயணியர் மாளிகை | 0.85 |
| 13. | நாகர்கோயிலில் உள்ள சேதுலட்சுமிபாய் ஆங்கிலப் பள்ளி | 4.43 |

| | | |
|---|---|---|
| 14. | புதுக்கோட்டை மாவட்டம், கீரனூரில் வட்டாட்சியர் அலுவலகம் | 0.52 |
| 15. | புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடியில் வட்டாட்சியர் அலுவலகம் | 0.97 |
| 16. | புதுக்கோட்டையில் மாவட்ட ஆட்சியர் குடியிருப்பு | 0.58 |
| 17. | கொடைக்கானலில் உள்ள கோஹினூர் ஷேக் அப்துல்லா மாளிகை | 1.35 |

**நடைபெற்று வரும் பணிகளின் விவரம் :–**

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1. | சென்னை, சேப்பாக்கம் பொதுப்பணித் துறை வளாகத்தில் தலைமைப் பொறியாளர், சென்னை மண்டலம் அலுவலகம் கட்டும் பணி | 23.05 |



நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில், வழக்குரைஞர் சங்க கட்டடம், வழக்குரைஞர் எழுத்தர் (Advocate Clerk) கட்டடம் மற்றும் 49 சட்ட அறைகள் உள்ளிட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடம்- மதிப்பீட்டு தொகை: ரூ.37.79 கோடி

| | | |
|---|---|---|
| 2. | நீலகிரி மாவட்டம், கோத்தகிரியில் அரசு அலுவலர்களுக்கான 16 குடியிருப்புகள் கட்டும் பணி | 5.21 |
| 3. | சென்னை, சைதாப்பேட்டை தாடண்டர்நகரில் அரசு பணியாளர்கள் குடியிருப்பு வளாகத்தில் சாலை மற்றும் பிற கூடுதல் வசதிகள் ஏற்படுத்துதல் | 23.49 |
| 4. | சென்னை சைதாப்பேட்டை தாடண்டர் நகரில் 190 'பி வகை' குடியிருப்புகள் கட்டும் பணி | 88.49 |
| 5. | திருப்பத்தூரில் புதிய சுற்றுலா மாளிகை கட்டும் பணி | 6. 98 |
| 6. | இராணிப்பேட்டையில் புதிய சுற்றுலா மாளிகை கட்டும் பணி | 6 .91 |
| 7. | செங்கல்பட்டில் புதிய சுற்றுலா மாளிகை கட்டும் பணி | 6 .79 |
| 8. | நாகப்பட்டினத்தில் புதிய சுற்றுலா மாளிகை கட்டும் பணி | 3.68 |
| 9. | திருச்சிராப்பள்ளியில் தலைமைப் பொறியாளர், உதவி செயற் பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர்களுக்கான குடியிருப்புகள் கட்டும் பணி | 2. 84 |

| | | |
|---|---|---|
| 10. | திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறில் புதிய கூடுதல் சுற்றுலா மாளிகை கட்டும் பணி | 3.26 |
| 11. | திருவண்ணாமலை மாவட்டம், ஜமுனாமரத்தூரில் புதிய கூடுதல் சுற்றுலா மாளிகை கட்டும் பணி | 2.99 |
| 12. | விருதுநகர் மாவட்டம், சாத்தூரில் புதிய சுற்றுலா மாளிகை கட்டும் பணி | 2.43 |
| 13. | கடலூர் மாவட்டம், கடலூரில் 3 உபகோட்ட அலுவலகங்கள் மற்றும் 5 பிரிவு அலுவலகங்கள் உள்ளிட்ட கோட்ட அலுவலகம் கட்டும் பணிகள் | 4.43 |
| 14. | சென்னை மாவட்டம், தண்டையார்பேட்டை பொதுப்பணி பணிமனை பணியாளர் குடியிருப்புகள் 9 பிளாக்குகளில் 54 வீடுகளை புனரமைக்கும் பணிகள் | 1.33 |
| 15. | தூத்துக்குடியில் பொதுப்பணித் துறை வளாகத்தில் உபகோட்ட அலுவலகம் கட்டும் பணி | 0.40 |

| | | |
|---|---|---|
| 16. | திருவாரூர் மாவட்டம், திருவாரூரில் பொதுப்பணித் துறை பொறியாளர்களுக்கான புதிய குடியிருப்புகள் கட்டும் பணி | 0.99 |
| 17. | சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் உபகோட்ட அலுவலகம் கட்டும் பணி | 0.93 |
| 18. | சென்னை தரமணியில் பொதுப்பணித் துறை வளாகத்தில் மழைநீர் வடிகால் மேம்படுத்தும் பணிகள், உட்புற சாலைகள் மற்றும் சுற்றுச் சுவர் பழுதுபார்த்தல் மற்றும் பிற மேம்படுத்தும் பணிகள் | 4.68 |
| 19. | சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் உள்ள பொதுப்பணித்துறை அலுவலகப் பிரிவுகளுக்கான இருக்கை வசதிகள் மேம்படுத்துதல் மற்றும் பிற நவீனப்படுத்தும் பணிகள் | 0.82 |
| 20. | மதுரையில் சுற்றுலா மாளிகை பிரதானக் கட்டடம் மற்றும் | 4.45 |

| | | |
|---|---|---|
| | கூடுதல் சுற்றுலா மாளிகை மேம்படுத்தும் பணி | |
| 21. | திருவண்ணாமலையில் புதிய கூடுதல் சுற்றுலா மாளிகை கட்டும் பணி | 8.32 |
| 22. | கள்ளக்குறிச்சியில் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உபகோட்ட அலுவலகக் கட்டடம் கட்டும் பணி | 2.73 |
| 23. | வேலூரில் புதிய சுற்றுலா மாளிகை கட்டடம் கட்டும் பணி | 7.63 |
| 24. | மண்டல அலுவலகங்களுக்கு தேவையான பொறியியல் உபகரணங்கள் (Scientific Instruments) மற்றும் தரக்கட்டுப்பாடு கோட்டங்களின் ஆய்வக உபகரணங்கள் கொள்முதல் செய்தல் | 10.00 |
| | **பாரம்பரியக் கட்டடங்கள் – பாதுகாத்தல், புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்பு பணிகள்** | |
| 25. | சென்னை, சேப்பாக்கம் ஹுமாயூன் மஹால் | 41.12 |

| | | |
|---|---|---|
| 26. | சென்னை, பழைய தங்க சாலையில் உள்ள அரசு அச்சகம் | 13.99 |
| 27. | திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள பழைய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் (இராணி மங்கம்மாள் அரண்மனை) | 9.40 |
| 28. | திருவண்ணாமலை மாவட்டம், செய்யாரில் உள்ள உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் (பழைய நீதிமன்றக் கட்டடம்) | 1.38 |
| 29. | கன்னியாகுமரி மாவட்டம், பாலாமோர் ஆய்வு மாளிகை | 0.29 |
| 30. | கோயம்புத்தூரில் உள்ள ஆளுநர் மாளிகை (பழைய வனத்துறை அலுவலகம்) | 10.25 |
| 31. | புதுக்கோட்டையில் தற்போதைய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் | 1.46 |
| 32. | புதுக்கோட்டை மாவட்டம், திருமயத்தில் தற்போதைய வட்டாட்சியர் அலுவலகம் | 3.43 |

| | | |
|---|---|---|
| 33. | மதுரை மாவட்டம், பெரியார் வைகை வடிநில வட்டம், நீர்வளத் துறை கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம் (இராணி மங்கம்மாள் அரண்மனை) | 1.98 |
| 34. | கடலூரில் உள்ள ஆட்சியர் முகாம் அலுவலகக் கட்டடம் (கிளைவ் ஹவுஸ்) | 3.13 |
| 35. | நாகப்பட்டினத்தில் உள்ள மாவட்ட நீதிமன்றம் மற்றும் உரிமையியல் நீதிமன்றம் | 7.91 |
| 36. | நாகர்கோவிலில் உள்ள பழமை வாய்ந்த கூட்டுறவு வங்கி | 1.25 |

**தொடங்கப்பட உள்ள பணிகளின் விவரம் :–**

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1. | மயிலாடுதுறையில் புதிய சுற்றுலா மாளிகை கட்டும் பணி | 6. 48 |
| 2. | சென்னை சேப்பாக்கம் பொதுப்பணித் துறை | 0.67 |

| | | |
|---|---|---|
| | வளாகத்தில் பணிபுரியும் மகளிருக்கான உணவருந்தும் கூடம் கட்டும் பணி | |
| 3. | கள்ளக்குறிச்சியில் புதிய சுற்றுலா மாளிகை கட்டும் பணி | 6.99 |
| 4. | சென்னை சைதாப்பேட்டையில் உள்ள தாடண்டர் நகரில் அரசு பணியாளர்களுக்கான 190 "சி" வகை அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் பணி | 99.98 |
| 5. | திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடியில் புதிய பொதுப்பணித் துறை ஆய்வு மாளிகை கட்டும் பணி | 1.70 |
| | **பாரம்பரியக் கட்டடங்கள் – பாதுகாத்தல், புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்புப் பணிகள்** | |
| 6. | மதுரை மாவட்டம், சோழவந்தான் அரசன் சண்முகனார் அரசினர் மேல்நிலைப் பள்ளி | 5.50 |

| | | |
|---|---|---|
| 7. | இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் முகாம், கலோனியல் மாளிகை | 2.20 |
| 8. | தேனி மாவட்டம், பெரியகுளத்தில் உள்ள பழைய மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் | 1.80 |
| 9. | கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் கைரேகை பதிவு மற்றும் பொருளாதார குற்றப்பிரிவு அலுவலகம் | 1.21 |
| 10. | கோயம்புத்தூரில் உள்ள CCMA அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளி | 7.60 |
| 11. | ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் உள்ள பழைய குற்றவியல் நடுவர் நீதிமன்றம் | 1.59 |
| 12. | சென்னை, சேப்பாக்கம் வளாகத்தில் உள்ள பழைய சம்பளம் மற்றும் கணக்கு அலுவலகம் (கிழக்கு) மற்றும் பழைய வேளாண்மைத் துறை பதிவுரு அலுவலகம் | 23.08 |

| | | |
|---|---|---|
| 13. | சென்னை, கிண்டியில் உள்ள கிங் நோய் தடுப்பு மருந்து மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் உள்ள பிரதான நிர்வாக அலுவலகக் கட்டடம் | 8.30 |
| 14. | திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி ஜாகீர் பூசிமலை குப்பம் அரண்மனை | 11.54 |
| 15. | புதுக்கோட்டை மாவட்டம், திருமயத்தில் தற்போது ஸ்ரீ சத்தியமூர்த்தி மேல்நிலைப் பள்ளி | 2.32 |
| 16. | தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் அரண்மனை சம்பாஜி ராஜா போஸ்லே குடியிருப்பு பகுதி | 3.86 |
| 17. | தஞ்சாவூர் அரண்மனை மங்கல ராஜே மேடிக் குடியிருப்பு பகுதி | 3.50 |
| 18. | தஞ்சாவூர் அரண்மனை மூத்த இளவரசர் குடியிருப்பு (அருங்காட்சியக பகுதி) பகுதி | 2.50 |
| 19. | திருச்சிராப்பள்ளி ஒருங்கிணைந்த நீதிமன்ற | 3.85 |

| | | |
|---|---|---|
| | வளாகத்தில் உள்ள துணை நீதிமன்றத்திற்கான பழைய ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடம் | |
| 20. | திருச்சிராப்பள்ளி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உள்ள பழைய முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்ற கட்டடம் | 4.70 |
| 21. | சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், இராஜாஜி ஹால் | 17.00 |
| 22. | கடலூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உள்ள பழைய மாவட்ட நீதிமன்ற கட்டடம் | 3.19 |

## 12.15 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

வருவாய்த் துறைக்குட்பட்ட கட்டடங்களான மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் குடியிருப்புகள், வட்டாட்சியர் அலுவலகங்கள், வருவாய் ஆய்வாளர் அலுவலகங்கள், கிராம நிர்வாக அலுவலகம் மற்றும் குடியிருப்புகளின் கட்டுமானம் மற்றும் அதன்

பராமரிப்புப் பணிகள் பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் ரூ.1023.34 கோடி மதிப்பீட்டிலான 332 கட்டுமானப் பணிகளில் 224 பணிகள் ரூ.476.53 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. 64 பணிகள் ரூ.408.75 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. ரூ.138.06 கோடி மதிப்பீட்டில் 44 பணிகள் தொடங்கப்பட உள்ளன.

### 12.16 பள்ளிக் கல்வித் துறை

"**கல்வி சிறந்த தமிழ்நாடு**" என்ற மகாகவி சுப்ரமணிய பாரதியாரின் செந்தமிழ் வரிகளுக்கேற்ப தமிழ்நாடு கல்வியில் சிறந்து விளங்குகின்றது. அனைத்து சமுதாயத்தினருக்கும் உலகத்தரம் வாய்ந்த கல்வியை இலவசமாக வழங்குவதில் தமிழ்நாடு அரசு தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது.

நன்கு காற்றோட்டமான வகுப்பறைகள், அவசரகால வெளியேறும் வழி, நவீன அறிவியல் ஆய்வகங்கள், பொது அறிவு மற்றும் கலாச்சாரத்தை வளர்க்கும் நூலகங்கள், அதிநவீன கணினி அறைகள், கலை மற்றும் கைவினைப் பொருட்கள் அறைகள்

மற்றும் பள்ளி வளாகத்தின் பாதுகாப்பு சுவர்கள் போன்ற பணிகள் தமிழ்நாட்டில் உள்ள அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி வளாகங்களில் பொதுப்பணித் துறையால் கட்டப்பட்டு வருகின்றன.

பள்ளிக் கல்வித் துறையில் மேல்நிலை மற்றும் உயர்நிலை பள்ளிகளில் மொத்தம் ரூ.1294.36 கோடி மதிப்பீட்டிலான 3600 கட்டுமான பணிகளில், ரூ.258 கோடி மதிப்பீட்டிலான 2994 பணிகள் முடிவடைந்துள்ளன. 186 பணிகள் ரூ.214.64 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. ரூ.821.72 கோடி மதிப்பீட்டில் 420 பணிகள் விரைவில் மேற்கொள்ளப்பட உள்ளன.

## 12.17 சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை

பணிக்குச் செல்லும் மகளிர் தங்கும் விடுதிகள், சமூக நலத் துறையின் அலுவலக கட்டடங்கள், சிறார்களுக்கான கூர்நோக்கு இல்லங்கள், சீர்திருத்த இல்லங்கள் ஆகிய கட்டடங்களின் கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பணிகள் பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறையில் ரூ.68.25 கோடி மதிப்பீட்டிலான 7 கட்டுமானப்

பணிகளில், ரூ.16.50 கோடி மதிப்பீட்டிலான 3 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ.51.75 கோடி மதிப்பீட்டிலான 4 பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 12.18 எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் ரூ.39.99 கோடி மதிப்பீட்டிலான 8 பணிகளில் திருச்சி, மதுரை, சேலம், மற்றும் விருத்தாச்சலத்தில் உள்ள அரசு அச்சகத்தின் தொழில்நுட்ப பிரிவு கட்டடத்தில் கசிந்த கூரையை சரி செய்யும் சிறப்பு பணிகள் ரூ.3.31 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. சென்னை அரசு மத்திய அச்சகத்தில் அமைந்துள்ள கோமாரி கட்டடத்தில் புதுப்பித்தல் மற்றும் சிறப்பு பழுதுபார்ப்பு பணிக்கு ரூ.0.94 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. சென்னையில் அரசு எழுதுபொருள் அலுவலகக் கட்டடம் ரூ.1.25 கோடி மதிப்பீட்டில் புதுப்பித்தல் மற்றும் சிறப்பு பழுதுபார்க்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. ரூ.34.49 கோடி மதிப்பீட்டில் சென்னை தண்டையார்பேட்டை 96 பணியாளர் குடியிருப்புகள் கட்டும் பணி துவங்கப்படவுள்ளது.

### 12.19 தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைக்குட்பட்ட நினைவகங்கள், நினைவு சின்னங்கள், சிலைகள்

ஆகியவை பொதுப்பணித் துறையால் கட்டப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

2021-2022 மற்றும் 2022-2023 ஆகிய ஆண்டுகளில் 6 நினைவகங்கள், 16 சிலைகள் மற்றும் 5 மணிமண்டபங்கள் கட்டுமான பணிகள், 2 நினைவு இல்லங்கள் பழுதுபார்த்தல் பணிகள் மற்றும் 3 மணிமண்டபங்கள் மற்றும் 2 நினைவகங்கள் புனரமைத்தல் பணிகள் ரூ.74.63 கோடி மதிப்பீட்டில் பொதுப்பணித்துறையால் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

## 12.20 சுற்றுலா, பண்பாடு மற்றும் சமய அறநிலையத் துறை

அரசு இசைப்பள்ளிகள், அருங்காட்சியங்கள், முக்கிய திருக்கோயில்களில் பக்தர்கள் தங்கும் விடுதிகள், திருமண மண்டபங்கள் மற்றும் அரங்கங்கள் ஆகியவை பொதுப்பணித் துறையால் கட்டப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

சுற்றுலா, பண்பாடு மற்றும் சமய அறநிலையத் துறையில் ரூ.228.43 கோடி மதிப்பீட்டிலான 30 கட்டுமானப் பணிகளில், ரூ.26.89 கோடி மதிப்பீட்டிலான 6 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ.70.33 கோடி மதிப்பீட்டிலான 12 பணிகள்

நடைபெற்று வருகின்றன மற்றும் ரூ.131.21 கோடி மதிப்பீட்டிலான 12 பணிகள் விரைவில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## 12.21 போக்குவரத்துத் துறை

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களுக்கும் போக்குவரத்து துறைக்கு தேவையான மண்டல அலுவலகம், ஓட்டுநர் சோதனை தடம், மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் போன்ற அலுவலக கட்டடங்கள் கட்டும் பணி பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

போக்குவரத்துத் துறையில் மொத்தம் ரூ.10.58 கோடி மதிப்பீட்டில் 3 கட்டடங்கள் கட்டும் பணிகளில், ரூ.8.16 கோடி மதிப்பீட்டில் 2 பணிகள் நடைபெற்று வருகின்றன. திருவள்ளூர் மாவட்டத்தில் ரூ.2.42 கோடி மதிப்பீட்டில் வட்டாரப் போக்குவரத்து அலுவலக அலகு கட்டடம் கட்டும் பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

## 12.22 கருவூலம் மற்றும் கணக்குத் துறை

கருவூலம் மற்றும் கணக்குத் துறைக்கு உட்பட்ட ஒருங்கிணைந்த நிதி அலுவலகங்கள், சார் கருவூலகங்கள் ஆகிய அலுவலகக் கட்டடங்கள்

கட்டும் பணி மற்றும் அதன் பராமரிப்புப் பணிகள் பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கருவூலம் மற்றும் கணக்குத் துறையில் ரூ.8.11 கோடி மதிப்பீட்டிலான 9 கட்டுமானப் பணிகளில் ரூ.2.43 கோடி மதிப்பீட்டிலான 3 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ.5.68 கோடி மதிப்பீட்டிலான 6 பணிகள் நடைபெற்று வருகின்றன.

**12.23 மாற்றுத் திறனாளிகள் நலத் துறை**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறையில் சேலம் மாவட்டம், ஆத்தூர் தேவியக்குறிச்சியில் உள்ள அரசு மறுமலர்ச்சி இல்லத்தில் குளியலறையுடன் கூடிய கழிப்பறை கட்டடம் கட்டும் பணி ரூ.23 இலட்சத்தில் முடிக்கப்பட்டது மற்றும் சேலம் மாவட்டம் கொண்டப்ப நாயக்கன்பட்டியில் செவித்திறன் குறை உடையோருக்கான அரசு உயர்நிலைப் பள்ளிக்கு விடுதியுடன் கூடிய கட்டடம் கட்டும் பணி ரூ.6.70 கோடிக்கு பணிகள் நடைபெற்று வருகிறது.

**12.24 இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை**

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இளைஞர் நலன் மற்றும்

விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்குத் தேவையான விளையாட்டு அரங்கம், உள் விளையாட்டு அரங்கம், விளையாட்டு வீரர், வீராங்கனைகள் தங்கும் விடுதிகள் மற்றும் நீச்சல் குளம் அமைத்தல் போன்ற கட்டுமானப் பணிகள் பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையில் ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் கரூர் மாவட்ட விளையாட்டு வளாகம் மற்றும் கோயம்புத்தூர் நேரு விளையாட்டரங்கம் சிறப்பு பழுதுபார்க்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

### 12.25 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்புக் கிடங்குகள்

தமிழ்நாட்டில், 30 மாவட்டங்களில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்ளைப் பாதுகாத்து வைப்பதற்குத் தேவையான பாதுகாப்புக் கிடங்குகள் கட்டும் பணிகள் பொதுப்பணித் துறையால் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. கன்னியாகுமரி மாவட்டத்தில் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன.

மேலும் புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்களில், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களைப் பாதுகாத்து

வைப்பதற்கு தேவையான கிடங்குகள் கட்டுவதற்கான பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளன.

## 13.0 2023–2024 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு

2023–2024 ஆம் நிதியாண்டில் பொதுப்பணித் துறை மானிய கோரிக்கை எண் 39–இன் கீழ் ரூ.1493.79 கோடி நிதி ஒதுக்கீட்டில் பின்வரும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன:–

| வ எண் | பொருள் | தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | மூலதனக் கணக்கு | |
| | (அ) மூலதனப் பணிகள் | 907.10 |
| | (ஆ) கணக்குகளிடையே மாற்றம் | 158.57 |
| 2 | வருவாய் கணக்கு | |
| | (அ) பராமரிப்பு | 137.03 |
| | (ஆ) பணியமைப்பு (பொதுப்பணித் துறை தலைமைச் செயலகம் உட்பட) | 290.29 |
| 3 | கடன் கணக்கு | 0.80 |
| | மொத்தம் | **1493.79** |

## 13.1 துறை வாரியான ஒதுக்கீடு 2023–2024

### 13.1.1 மூலதனப் பணிகள்

| வ. எண் | துறையின் பெயர் | 2023–2024 வரவு செலவு திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | பொதுப்பணித் துறை | 132.27 |
| 2 | மருத்துவம்–மக்கள் நல்வாழ்வு துறை | 160.60 |
| 3 | உள் துறை (நீதி மற்றும் சட்டம்) | 196.75 |
| 4 | வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை | 192.50 |
| 5 | வணிகவரித் துறை | 18.73 |
| 6 | பதிவுத் துறை | 7.39 |
| 7 | பாரம்பரிய கட்டடங்களை பாதுகாத்தல் | 107.74 |
| 8 | பிற துறைகள் | 91.12 |
| | மொத்தம் | **907.10** |

**முடிவுரை**

பொதுப்பணித் துறையானது, தலைமைச் செயலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் உட்பட வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நீதித் துறை, மருத்துவம்–மக்கள் நல்வாழ்வுத் துறை, பள்ளிக் கல்வித் துறை, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை முதலிய பல்வேறு துறைகளுக்கும் உரிய கட்டடங்களைத் திராவிடக் கட்டடக்கலை நுட்பங்கள் மிளிர–கலையெழிலுடன் மேற்கொண்டு தமிழ்நாடு அரசுக்கு பெருமைகள் சேர்த்து வருகிறது.

2023–2024ஆம் நிதியாண்டில் கட்டுவதற்குத் திட்டமிட்டுள்ள கட்டடப் பணிகள் குறித்த விவரங்கள் மேலே விவரிக்கப்பட்டுள்ளது. இத்துறையானது பணிகளை உரிய காலத்தில் தரத்துடன் செயல்படுத்தி, **"மாண்புமிகு முதலமைச்சரின் ஆற்றல்மிக்க தலைமையின் கீழ் வளமான தமிழ்நாடு"** என்ற தொலைநோக்குப் பார்வையை நிறைவேற்றுவதை உறுதி செய்யும்.

**எ. வ. வேலு**
**பொதுப்பணித் துறை அமைச்சர்**

அரசு மைய அச்சகம், சென்னை—600 001.